**கவனிக்க.**- 12.09.2025 ஆந் திகதிய 2454 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2455 - 2025 සැප්තැම්බර් මස 19 වැනි සිකුරාදා - 2025.09.19

2455 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1532 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1554 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1529 - B 82720- 403 (2025/09)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

## அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் ஆரம்ப மட்டத் தேர்ச்சி பெற்ற சேவைப் பிரிவில் தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் 2025

**The Recruitment to the Post of Technician of the Department of Measurement Units, Standards and Services – 2025**

இத் திணைக்களத்தின் ஆரம்ப மட்டத் தேர்ச்சி பெற்ற சேவைப் பிரிவில் (PL 3 – 2025) தொழில்நுட்பவியலாளர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காகப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்வதற்காகத் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும். இவ் அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பின்வரும் திகதிக்கு அல்லது அதற்கு முன்பு "பணிப்பாளர், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம், மாஹேனவத்த, பிட்டிபன, ஹோமாகம" எனப்படும் விலாசத்திற்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் ஆரம்ப தொழில்நுட்ப சேவைப் பிரிவில் தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக ஆட் சேர்ப்புச் செய்தல் 2025" எனத் தெளிவாக எழுத வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2025.10.21 ஆகும்.

**குறிப்பு**: விண்ணப்பப் படிவம் அல்லது அதனுடன் தொடர்புடைய கடிதம் தபாலில் தொலைந்ததாகவோ அல்லது தாமதமானது என்று செய்யும் முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு இறுதி நாள் வரை காத்திருப்பதன் மூலம் ஏற்படும் பாதிப்புகளுக்கு விண்ணப்பதாரிகளே முகங்கொடுக்க வேண்டும்.

01. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

ஒரு தொழில்முறைப் பரீட்சை மற்றும் ஒரு கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் ஆட் சேர்ப்பு செய்யப்படும். அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளர் அல்லது அவரால் அனுமதி வழங்கப்படும் நிறுவனம் அல்லது தேர்வுச் சபையினால் நடத்தப்படும் தொழில்முறைப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களுள், திறமைகளின் வரிசைப்படி ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டிய எண்ணிக்கையில் இரு மடங்கானவர்கள் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளர் அல்லது அவரால் அனுமதி வழங்கப்படும் நிறுவனம் அல்லது தேர்வுச் சபையினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கும் முறைமைக்கேற்ப கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும். தொழில்சார் பரீட்சை மற்றும் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையில் பெற்ற மொத்த புள்ளிகளின் திறமைகளின் வரிசைப்படி தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் மாத்திரம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளரினால் உரிய பதவிகளுக்கு நியமிக்கப்படுவார்கள்.

02. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:**

I. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியது மாகும். விதவை/ தபுதாரர் மற்றும் அநாதைப் பிள்ளைகளின் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

II. இந் நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும்.

III. III ஆம் தரத்திற்கு இணைக்கப்பட்டு 03 வருடங் களுக்குள் முதலாவது தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

IV. அரசாங்க மொழிக் கொள்கைக்கேற்ப மற்றும் 2020.10.16 ஆந் திகதியுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 இற்கு அமைவாக உரிய காலத்திற்குள் அரசாங்க மொழித் தேர்ச்சியை பூர்த்தி செய்ய வேண்டும்.

V. இந் நியமனமானது அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன கோவைக்கும், அரசாங்க நிதி பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டதாகும்.

03. **சம்பள அளவுத் திட்டம் :**

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 10/2025 இன் கீழ் PL 3-2025 ரூபா 42,780 - 10 x 490-10 x 540-10 x 590 - 12 x 630- ரூபா 66,540 (மாதாந்த) சம்பள அளவுத் திட்டம் உரித்தாகும். அச் சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கமைய நியமனம் அமுலாகும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசினால் செலுத்தப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

04. **பதவியின் கடமைகள் :**

பிரதான மின் கட்டமைப்பின் பராமரிப்பு மற்றும் திருத்தப் பணிகளில் உதவுதல், மின்சுற்றுகளில் உள்ள

பிழைகளைக் கண்டறிவதில் உதவுதல், இலத்திரனியல் உபகரணங்களின் சிறிய பழுதுபார்ப்புகள், தேவைப்படும் போது ஆய்வுகூடப் பணிகளுக்கு உதவுதல் மற்றும் பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் வழங்கப்படும் பிற கடமைகள்.

05. **தகைமைகள்:**

5.1 **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

5.2 **தொழிற் தகைமைகள் :**

மேலே 04 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பதவியின் கடமைகளுக்கு ஏற்றவாறு மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் திறமை NVQ நான்காம் (04) மட்டத்திற்குக் குறையாத மட்டத்திலான தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

5.3 **அனுபவம் :**

உரிய துறையில் 03 வருடங்களுக்குக் குறையாத செயற்பாட்டு அனுபவம் இருத்தல் வேண்டும்.

5.4 **உடற் தகைமைகள் :**

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எப்பாகத்திலும் கடமையாற்றவும், பதவியின் கடமைகளை மேற்கொள்வதற்குப் போதுமான உடல், உளத் தகுதியை பெற்றிருத்தல் வேண்டும்.

5.5 **வயது :**

விண்ணப்பம் கோரும் இறுதி திகதிக்கு ஆகக் குறைந்த வயதெல்லை 18 ஆக இருக்க வேண்டிய தோடு, உச்ச வயதெல்லை 45 வயதாகும். அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

5.6 **வேறு தகைமைகள்:**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தையையும் சிறந்த உடற் தகைமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.
III. விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு ஆட் சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

06. **பாட விதானம்:**

6.1 **தொழில் சார் பரீட்சை :**

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் ஆரம்ப மட்ட தேர்ச்சி பெற்ற சேவைப் பிரிவில் (PL-03-2025) தொழில்நுட்பவியலாளர் பதவிக்கான தொழிற் பரீட்சைக்காகப் பின்வரும் பாடத்திட்டம் உள்ளடங்கும். அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்படும் நிறுவனம் அல்லது பரீட்சைச் சபையினால் தொழிற் பரீட்சை நடாத்தப்படும்.

| *வினாத்தாள்* | *பாடத்திட்டம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தி அடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| செயல்முறைப் பரீட்சை | தேசிய தொழிற் தேர்ச்சி NVQ நான்காம் (04) மட்டத்திற்குரியதாகப் பரீட்சை நடாத்தப்படும் | 1 மணி | 100 | 40% |

6.2 **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை - 100 புள்ளிகள்

செயல் முறைப் பரீட்சையின் வினாத்தாளுக்கு 40% அல்லது அதற்கு மேல் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுள் திறமைகளின் வரிசைப்படி ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டிய எண்ணிக்கையில் இரு மடங்கானவர்கள் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதியை அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளர் தீர்மானிப்பார். அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் பின்வரும் விதத்தில் புள்ளிகள் வழங்கப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள்* | *உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை* | *தெரிவு செய்வதற்காகக் கவனத்திற் கொள்ளும் ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமை | 20 | 40% |
| மேலதிக அனுபவம் | 40 | |
| மேலதிக தொழிற் தகைமை | 20 | |
| மொழித் தேர்ச்சி | 15 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறன் | 05 | |
| | 100 | |

**குறிப்பு:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கின்றமை நியமனத்திற்கான தகுதியை பூர்த்தி செய்ததாகக் கருதப்பட மாட்டாது.

07. **பரீட்சை நிபந்தனைகள் :**

I. தொழிற் பரீட்சைக்காக விண்ணப்பதாரர்கள் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தான் விரும்பிய ஒரு மொழியில் தோற்ற முடியும். ஒரு விண்ணப்பதாரிக்குத் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

II. விண்ணப்பப்படிவம் 22-29 cm அளவிலான A4 தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்க வேண்டியதோடு இல. 01 முதல் 10 வரையிலான விடயங்கள் முதலாம் பக்கத்திலும் இல. 11 முதல் 13 வரையிலான விடயங்கள் இரண்டாம் பக்கத்திலும், எஞ்சியவை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் விதத்தில் தயாரித்து தமது கையெழுத்திலேயே விண்ணபத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதற்ற மற்றும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் பிரதியை தம்மிடம் வைத்துக் கொள்ளல் பிரயோசனமுடையதாக இருக்கும். மேலும் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலின் மாதிரி விண்ணப்பத்திற்கு ஏற்புடையதாவென விண்ணப்பதாரி அறிந்து கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

III. அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் அழைப்புக் கடிதம் அனுப்பப்படும். தொழில்முறைப் பரீட்சை ஆரம்பமாகும் திகதியில் அழைப்புக் கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரிக்கு அழைப்புக் கடிதம் அனுப்புதல் அவரைப் பதவிக்காக தெரிவு செய்வதற்குத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதாக ஏற்றுக் கொண்டதாகக் கருதக் கூடாது.

IV. தொழில்முறைப் பரீட்சையை பிற்போடுவது அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளர் வசமாகும்.

V. தொழில்முறைப் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக நியமன அதிகாரியினால் வகுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் உட்பட்டவர்களாவார்கள். அச் சட்டதிட்டங்களை மீறினால் நியமன அதிகாரியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட வேண்டி நேரிடும்.

VI. விண்ணப்தாரியின் ஆளடையாளம்: பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் விதத்தில் அனைத்து விண்ணப்பதாரர்களும் தொழில்சார் பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். பின்வரும் ஆவணங்களுள் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

(VII) **கவனிக்கவும்:**

(அ) கோரும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(ஆ) அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பத்தில் தமது கையொப்பத்தை உறுதி செய்வது கட்டாயமாகும். தற்போது அரசாங்க சேவையில் உள்ள அதிகாரிகள், தமது திணைக்கள/ நிறுவன தலைவரினூடாக தமது

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படையின் பதவி நிலை அதிகாரி அல்லது ரூபா 82,150.00 அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்த ஒன்றிணைந்த சம்பளம் பெறும் அரசாங்க சேவையில் நிரந்தர பதவியை வகிக்கும் அதிகாரியினால் உறுதி செய்யப்பட வேண்டும்.

(VIII) **போலித் தகவல் வழங்குவதற்கான தண்டனை:**

ஏதேனும் ஒரு விண்ணப்பதாரருக்குத் தகைமை இல்லையென அறியக் கிடைத்தால் தொழில்முறைப் பரீட்சைக்கு முன்பு அல்லது தொழில்முறைப் பரீட்சை நடைபெறும் காலத்தினுள் அல்லது தொழில்முறைப் பரீட்சைக்குப் பின்பு அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் விண்ணப்பத்தன்மை இரத்துச் செய்யப்படக்கூடும். ஒரு விண்ணப்பதாரர் முன்வைத்துள்ள ஏதேனும் ஒரு விடயம் போலி என அறிந்தே முன்வைத்திருப்பதாக அறியக் கிடைத்தால் அல்லது ஏதேனும் ஒரு முக்கிய விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

08. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தாபன செயல் திட்ட விதிகளும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் ஆரம்பத் திறன் சேவை வகைக்கான யாப்பு மற்றும் அதில் செய்யப்பட்டுள்ள திருத்த நிபந்தனைகள் இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

09. இந் நிபந்தனைகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் முடிவெடுக்கப்படும்.

10. இவ் அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளர் வசமாவதோடு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான அறிவித்தல்களில் ஏதேனும் இணக்கமற்ற தன்மை ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள அறிவித்தல் ஏற்புடையதாகும்.

எஸ். என். அக்குரந்திலக்க,
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும்
சேவைகள் பணிப்பாளர்,
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும்
சேவைகள் திணைக்களம்,
மாஹேனவத்த,
பிட்டிபன,
ஹோமாகம.

2025, செத்தெம்பர் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025**

**The Recruitment to the Posts of Technician of the Department of Measurement Units, Standards and Services – 2025**

அலுவலக உபயோகத்திற்காக [ ]

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் சிங்களம் - 02 தமிழ் - 03 ஆங்கிலம் - 04 [ ]

---

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
உதாரணம் – BANDARA, A. B.
..........................................................................................................................................

2. முதல் எழுத்துக்களிலான பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
..........................................................................................................................................
..........................................................................................................................................

3. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :
..........................................................................................................................................
..........................................................................................................................................

4. நிரந்தர முகவரி - ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் (பரீட்சை அனுமதியட்டை இவ் விலாசத்திற்கு அனுப்பப்படும்.)
..........................................................................................................................................
..........................................................................................................................................

5. பால் நிலை (ஆண்- 1,பெண்- 2)
உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும். ☐

6. திருமணமான/திருமணமாகாத நிலை (திருமணமானவர் -1, திருமணமாகாதவர் -2, வேறு - 3)
உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும். ☐

7. இனத் தொகுதி (சிங்களம்-1, தமிழ் -2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம் -4, வேறு -5)
உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும். ☐

8. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

9. தொலைபேசி இலக்கம்:

கையடக்க: ☐☐☐☐☐☐☐☐☐☐

நிலையான: ☐☐☐☐☐☐☐☐☐☐

10. (அ) பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ஆ) விண்ணப்பம் கோரும் இறுதி நாளுக்கு வயது : (2025.10.21 )

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

11. கல்வி/தொழிற் தகைமைகள்:

11.1 க.பொ.த (சா.த.) பரீட்சை: சித்தியடைந்த ஆண்டு ......................
சுட்டெண்............................

| | *பாடம்* | *பெற்ற சித்தி* | | *பாடம்* | *பெற்ற சித்தி* |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

11.2 வேறு கல்வி /தொழிற் தகைமைகள் :

| *பரீட்சை* | *திகதி* | *நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

11.3 பெற்றுள்ள தேசிய தொழிற் தகைமை மட்டம் (NVQ மட்டம்) :

| *கற்றுள்ள பாடநெறி* | *நிறுவனம்* | *பெற்றுள்ள NVQ மட்டம்* | *NVQ பாடநெறியைப் பூர்த்தி செய்த திகதி (சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி)* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

(கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும் )

12. நீர் அரசாங்க பதவியொன்று வகித்து அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளீரா? (அவ்வாறாயின், விபரங்களைக் குறிப்பிடுக.) அல்லது உமக்கு எதிராக (தற்போதும் அரசாங்க சேவையில் ஈடுபட்டிருந்தால்) திணைக்கள ஒழுக்காற்று விசாரணை செய்யப்பட்டுள்ளதா?

.......................................................................................................................................................................................

13. நீர் ஏதாவது ஒரு குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

.......................................................................................................................................................................................

14. விண்ணப்பதாரரின் உறுதிப்படுத்தல்:

இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரையில் உண்மையானவை என்றும், ஆட்சேர்ப்பு விதிகளின்படி செயற்படவும், இவ் ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு அமைய நான் தகுதியற்றவர் என்று தெரியவந்தால், தொழில்முறைப் பரீட்சைக்கு முன், அல்லது அது நடக்கும் போது அல்லது அதற்குப் பின்னர் எனது விண்ணப்பத்தன்மை இரத்து செய்ய எடுக்கப்படும் எந்தவொரு முடிவுக்கும் நான் உடன்படுகிறேன். மேலும், இந்தப் பதவிக்கு நான் நியமிக்கப்பட்ட பின்னரும், இதில் உள்ள விபரங்கள் ஏதேனும் தவறாகவோ அல்லது உண்மைக்குப் புறம்பாகவோ இருந்தால், எந்த இழப்பீடும் இல்லாமல் நான் பணியிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாக நேரிடும் எனவும், ஆட்சேர்ப்பு தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் பரீட்சை முடிவுகளை வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் முடிவுகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்றும் கூறுகின்றேன்.

............................ ..........................................................
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

15. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இங்கு கையொப்பமிட்டுள்ள ............................................................இல் வசிக்கும் திரு./திருமதி/செல்வி ........................ ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ..............................திகதி மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
பதவிநிலை முத்திரை

உறுதிப்படுத்துபவரின் பெயர்:................................................
பதவி: ..............................................
முகவரி: ..............................................
திகதி: .................................................

16. திணைக்கள/நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்தல்: -
(தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு மாத்திரம் ஏற்புடையதாகும் )

இவ் அமைச்சில்/ திணைக்களத்தில் / நிறுவனத்தில் பணியாற்றும் திரு./திருமதி/செல்வி ...................................................... ............. என்பவர் தற்போது ......................................... பதவியில் பணியாற்றுகின்றார் என்பதையும், அவரின் வேலைகள் மற்றும் நடத்தை திருப்திகரமானது என்பதையும், ஒழுக்காற்று விசாரணைகள் எதுவும் இல்லை என்பதையும், அவ்வாறு செயற்படும் எண்ணம் இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இப் பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

திகதி ................................ ........................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
பதவிநிலை முத்திரை

09-137

**வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு**

**அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் அளவீட்டு நியமங்கள் மற்றும் சேவைகள் உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் 2025**

**The Recruitment to the Post of Measurement Standard and Service Attendant of the Department of Measurement Units, Standards and Services – 2025**

இத் திணைக்களத்தின் ஆரம்ப மட்ட பகுதித் தேர்ச்சி பெற்ற சேவைப் பிரிவில் (PL 2 – 2025) அளவீட்டு நியமங்கள் மற்றும் சேவைகள் உதவியாளர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காகப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்வதற்காகத் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படும். இவ் அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பின்வரும் திகதிக்கு அல்லது அதற்கு முன்பு "பணிப்பாளர், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம், மாஹேனவத்த, பிட்டிபன, ஹோமாகம" எனப்படும் விலாசத்திற்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் ஆரம்ப மட்ட பகுதித் தேர்ச்சி பெற்ற சேவைப் பிரிவில் பதவிகளுக்கான தொழில் முறைப் பரீட்சை - 2025" என தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2025.10.21 ஆகும்.

**குறிப்பு**: விண்ணப்பப் படிவம் அல்லது அதனுடன் தொடர்புடைய கடிதம் தபாலில் தொலைந்ததாகவோ அல்லது தாமதமானது என்று செய்யும் முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு இறுதி நாள் வரை காத்திருப்பதன் மூலம் ஏற்படும் பாதிப்புகளுக்கு விண்ணப்பதாரிகளே முகங்கொடுக்க வேண்டும்.

01. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

ஒரு தொழில்முறைப் பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் ஆட் சேர்ப்புச் செய்யப்படும்.

(அ) 04 ஆம் பந்தியில் காணப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் தொழில்முறைப் பரீட்சைக்காக அழைக்கப்படு வார்கள்.

(ஆ) அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளரினால் அனுமதி வழங்கப்படும் நிறுவனத்தினால் நடத்தப்படும் தொழில்முறைப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களுள், திறமைகளின் வரிசைப்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

02. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:

(I) இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியது மாகும். விதவை / தபுதாரர் மற்றும் அநாதை பிள்ளைகளின் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும். எவ்வாறாயினும் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான முடிவுகளுக்கு அதிகாரிகள் கட்டுப்பட வேண்டும்.

(II) இந் நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும்.

(III) அரச மொழி கொள்கைக்கேற்ப மற்றும் 2020.10.16 திகதியுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 இற்கு அமைவாக உரிய காலத்திற்குள் அரச மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(IV) இந் நியமனமானது அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரசாங்க நிதி பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டதாகும்.

03. **சம்பள அளவுத் திட்டம் :**

இப் பதவிக்கு அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 10/2025 இன் கீழ் PL 2-2025 ரூபா 41,800 - 10 x 490-10 x 540-10 x 590 -12 x 630- ரூபா 65,560.00 (மாதாந்த) சம்பள அளவுத் திட்டம் உரித்தாகும். (அச் சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கமைய நியமனம் அமுலாகும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்)

04. **தகைமைகள் :**

4.1 **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக்குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4.2 **தொழிற் தகைமைகள் :**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள/பாடத் துறைகளுக் குரியதான பாடநெறிகளுக்காக தேசிய தொழிற் தகைமை NVQ 3 மட்டத்தைப் பெற்றிருத்தல்.

1. இயந்திரத் தொழில்நுட்பம்
2. மின்னியல் தொழில்நுட்பம்

3. தகவல் தொழில்நுட்பம்
4. கைத்தொழில் தொழில்நுட்பம்
5. கணினித் தொழில்நுட்பம்
6. தகவல் தரவு அமைப்புத் தொழில்நுட்பம்

**குறிப்பு**: 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் உள்ள போதிய அளவு விண்ணப்பதாரர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 28/2016 இற்கு அமைவாக 4.2 இல் உள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களும் கவனத்தில் கொள்ளப்படுவார்கள்.

4.3 **உடற் தகைமைகள் :**

I. சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எப்பாகத்திலும் கடமையாற்றவும் ,
II. பதவியின் கடமைகளை மேற்கொள்வதற்குப் போதுமான உடல், உளத் தகுதியை பெற்றிருத்தல் வேண்டும்.

4.4 **வயது :**

I. ஆகக் குறைந்த வயதெல்லை - 18 வயது
II. உச்ச வயதெல்லை - 45 வயது

4.5 **வேறு தகைமைகள் :**

I. விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தையை கொண்டிருத்தல் வேண்டும்.
III. விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகள் அனைத்தையும் பூர்த்தி செய் திருத்தல் வேண்டும்.

05. **பாட விதானம்:**

5.1 **தொழில்முறைப் பரீட்சை :**

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் ஆரம்ப மட்ட பகுதித் தேர்ச்சி பெற்ற சேவைப் பிரிவில்; (PL 2 – 2025) அளவீட்டு நியமங்கள் மற்றும் சேவைகள் உதவியாளர் பதவிக்கான தொழில்முறைப் பரீட்சை பின்வரும் பாடவிதானத்தைக் கொண்டிருக்கும்.

பரீட்சை பின்வருமாறு இடம்பெறும்.

| *வினாத்தாள்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடையும் புள்ளிகள்* |
|---|---|---|---|
| செயல்முறைப் பரீட்சை | 01 மணி | 100 | 40 % |

பாடவிதானம்: பின்வருமாறு

| *வினாத்தாளின் பெயர்* | *பாட விதானம்:* |
|---|---|
| செயல்முறைப் பரீட்சை | தொழிலின் போது அடிக்கடி பயன்படுத்தும் அளவை உபகரணங்கள் மற்றும் கருவிகளின் பெயர்கள், அவற்றின், பயன்பாடு மற்றும் பராமரிப்புகள் தொடர்பான பொது அறிவு |

06. **பரீட்சை நிபந்தனைகள் :**

I. தொழிற் பரீட்சைக்காக விண்ணப்பதாரர்கள் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழிகளில் தான் விரும்பிய ஒரு மொழியில் தோற்ற முடியும். ஒரு விண்ணப்பதாரிக்குத் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

II. விண்ணப்பப்படிவம் 22-29 cm அளவிலான A 4 தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்க வேண்டியதோடு இல. 01 முதல் 09 வரையிலான விடயங்கள் முதலாம் பக்கத்திலும் இல.10 முதல் 13 வரையிலான விடயங்கள் இரண்டாம் பக்கத்திலும், எஞ்சியவை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் விதத்தில் தயாரித்து தமது கையெழுத்திலேயே விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதற்ற மற்றும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் பிரதியை தம்மிடம் வைத்துக் கொள்ளல் பிரயோசனமுடையதாக இருக்கும். மேலும் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவம் பரீட்சை

அறிவித்தலின் மாதிரி விண்ணப்பத்திற்கு ஏற்புடையதாவென விண்ணப்பதாரி அறிந்து கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

III. அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் பரீட்சை அனுமதியட்டை வழங்கப்படுவதோடு அனுமதியட்டை இல்லாது பரீட்சை மண்டபத்துக்குள் நுழைய அனுமதி வழங்கப்பட மாட்டாது. தொழில்முறைப் பரீட்சை ஆரம்பமாகும் நாள் தமது கையொப்பத்தை உறுதி செய்த பரீட்சை அனுமதியட்டை மற்றும் தேசிய ஆளடையாள அட்டையை மாத்திரம் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஒரு விண்ணப்பதாரருக்குப் பரீட்சை அனுமதியட்டை வழங்குதல் அவரைத் தெரிவு செய்வதற்குத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதாக ஏற்றுக்கொண்டதாகக் கருதக் கூடாது.

IV. தொழில்முறைப் பரீட்சையைப் பிற்போடுவது அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளர் வசமாகும்.

V. தொழில்முறைப் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக நியமன அதிகாரியினால் வகுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் உட்பட்டவர்களாவார்கள். அச் சட்டதிட்டங்களை மீறினால் நியமன அதிகாரியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட வேண்டி நேரிடும்.

VI. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்:**

பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் விதத்தில் அனைத்து விண்ணப்பதாரர்களும் தொழில்முறைப் பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். பின்வரும் ஆவணங்களுள் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. ஆட்பதிவுத் திணைக்களத் தேசிய ஆளடையாள அட்டை ;
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

VII. **கவனிக்கவும்:**

(அ) கோரும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(ஆ) அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பத்தில் தமது கையொப்பத்தை உறுதி செய்வது கட்டாயமாகும். தற்போது அரசாங்க சேவையில் உள்ள அதிகாரிகள், தமது திணைக்கள்/நிறுவன தலைவரினூடாக தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/முப்படையின் பதவி நிலை அதிகாரி அல்லது ரூபா 82,150.00 அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்த ஒன்றிணைந்த சம்பளம் பெறும் அரசாங்க சேவையில் நிரந்தர பதவியை வகிக்கும் அதிகாரியினால் உறுதி செய்யப்பட வேண்டும்.

VIII. **போலித் தகவல் வழங்குவதற்கான தண்டனை:**

ஏதேனும் ஒரு விண்ணப்பதாரருக்குத் தகைமை இல்லையென அறியக் கிடைத்தால் தொழில்முறைப் பரீட்சைக்கு முன்பு அல்லது தொழில்முறைப் பரீட்சை நடைபெறும் காலத்தினுள் அல்லது தொழில்முறைப் பரீட்சைக்குப் பின்பு அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் விண்ணப்பத்தன்மை இரத்துச்செய்யப்படக்கூடும். ஒரு விண்ணப்பதாரர் முன்வைத்துள்ள ஏதேனும் ஒரு விடயம் போலி என அறிந்தே முன்வைத்திருப்பதாக அறியக் கிடைத்தால் அல்லது ஏதேனும் ஒரு முக்கிய விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

07. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தாபன செயல் திட்ட விதிகளும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் ஆரம்பத் திறன் சேவை வகைக்கான யாப்பு மற்றும் அதில் செய்யப்பட்டுள்ள திருத்த நிபந்தனைகள் இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

08. சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான இவ் அறிவித்தல்களின் உரைப்பகுதிகளில் ஏதேனும் இணக்கமற்ற தன்மை ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் ஏற்புடையதாகும்.

09. இந் நிபந்தனைகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் முடிவெடுக்கப்படும்.

எஸ். என். அக்குரந்திலக்க,
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளர்,
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்.

2025, செத்தெம்பர் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் அளவீட்டு நியமங்கள் மற்றும் சேவைகள் உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2025**

The Recruitment to the Post of Measurement Standard and Service Attendant of the Department of Measurement Units, Standards and Services - 2025

அலுவலக உபயோகத்திற்காக ☐

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் சிங்களம் - 02 தமிழ் - 03 ஆங்கிலம் - 04 ☐

குறிப்பு: விண்ணப்பிக்கும் மொழி மூலம் மாற்ற முடியாது

---

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
உதாரணம் – BANDARA, A. B.
......................................................................

2. முதல் எழுத்துக்களிலான பெயர்கள் : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்;)
......................................................................
......................................................................

3. முழுப் பெயர் : (சிங்களத்தில்/தமிழில்) :
......................................................................
......................................................................

4. நிரந்தர முகவரி - ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் (பரீட்சை அனுமதியட்டை இவ் விலாசத்திற்கு அனுப்பப்படும்.)
......................................................................
......................................................................

5. பால் நிலை : (ஆண்- 1,பெண்- 2)
உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும். ☐

6. விவாக அந்தஸ்து : (திருமணமானவர் -1, திருமணமாகாதவர் -2, வேறு - 3)
உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும். ☐

7. சாகியம் (சிங்களம்-1, தமிழ் -2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம் -4, வேறு -5)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.) ☐

8. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

9. (அ) பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ஆ) விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்துக்கு வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

10. தொலைபேசி இலக்கம்:

நிலையான: ☐☐☐☐☐☐☐☐☐☐

கையடக்க: ☐☐☐☐☐☐☐☐☐☐

11. கல்வி/தொழிற் தகைமைகள்:

11.1 க.பொ.த (சா.த) பரீட்சை:
சித்தியடைந்த ஆண்டு ..................... சுட்டெண்...........................

| | *பாடம்* | *பெற்ற சித்தி* | | *பாடம்* | *பெற்ற சித்தி* |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

11.2 வேறு கல்வி /தொழிற் தகைமைகள் :

| *பரீட்சை* | *திகதி* | *நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

11.3 பெற்றுள்ள தேசிய தொழிற் தகைமை மட்டம் (NVQ மட்டம்) :

| *கற்றுள்ள பாடநெறி* | *நிறுவனம்* | *பெற்றுள்ள NVQ மட்டம்* | *NVQ பாடநெறியைப் பூர்த்தி செய்த திகதி (சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி)* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்

12. நீர் அரசாங்க பதவியொன்று வகித்து அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளீரா? (அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடுக.) அல்லது உமக்கு எதிராக (தற்போதும் அரசாங்க சேவையில் ஈடுபட்டிருந்தால்) திணைக்கள ஒழுக்காற்று விசாரணை செய்யப்பட்டுள்ளதா?
.........................................................................................................................................................................................

13. நீர் ஏதாவது ஒரு குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?
.........................................................................................................................................................................................

14. விண்ணப்பதாரரின் உறுதிப்படுத்துகை:

இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரையில் உண்மையானவை என்றும், ஆட்சேர்ப்பு விதிகளின்படி செயற்படவும், இவ் ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு அமைய நான் தகுதியற்றவர் என்று தெரியவந்தால், தொழில்முறைப் பரீட்சைக்கு முன், அல்லது அது நடக்கும் போது அல்லது அதற்குப் பின்னர் எனது விண்ணப்பத்தை இரத்துச் செய்ய எடுக்கப்படும் எந்தவொரு முடிவுக்கும் நான் உடன்படுகிறேன். மேலும், இந்தப் பதவிக்கு நான் நியமிக்கப்பட்ட பின்னரும், இதில் உள்ள விபரங்கள் ஏதேனும் தவறாகவோ அல்லது உண்மைக்குப் புறம்பாகவோ இருந்தால், எந்த இழப்பீடும் இல்லாமல் நான் பணியிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாக நேரிடும் எனவும், ஆட்சேர்ப்பு தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் பரீட்சை முடிவுகளை வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் முடிவுகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்றும் கூறுகின்றேன்.

திகதி: ........................... .........................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

15. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இங்கு கையொப்பமிட்டுள்ள ..............................................................இல் வசிக்கும் திரு./திருமதி/செல்வி ........................ ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ..............................திகதி மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர்:................................................
பதவி: ...............................................
முகவரி: ...............................................
திகதி: ................................................

16. திணைக்கள/நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்தல்:
(தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு மாத்திரம் ஏற்புடையதாகும் )

இவ் அமைச்சில்/ திணைக்களத்தில் / நிறுவனத்தில் பணியாற்றும் திரு./திருமதி/செல்வி ..................................................... ............. என்பவர் தற்போது ......................................... பதவியில் பணியாற்றுகின்றார் என்பதையும், அவரின் வேலைகள் மற்றும் நடத்தை திருப்திகரமானது என்பதையும், ஒழுக்காற்று விசாரனைகள் எதுவும் இல்லை என்பதையும், அவ்வாறு செயற்படும் எண்ணம் இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இப் பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

திகதி ................................

........................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
பதவிநிலை முத்திரை

09-138

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

## இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் III ஆம் தரத்திற்கு கால்நடை வைத்திய அதிகாரி பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் III ஆம் தரத்தில் கால்நடை வைத்திய அதிகாரி பதவி வெற்றிடங்கள் நூற்றி ஏழு (107) இன் பொருட்டு நியமனம் செய்வதற்கு தகைமை உள்ளவர்களை தெரிவு செய்வதற்காக மிருக வைத்திய பட்டதாரிகளிடம் இருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கிழே குறிப்பிடப்பட்டுள்ள திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், த.பெ. இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை எனும் முகவரிக்கு கிடைக்கத்தக்கவாரு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் III ஆம் தரத்தில் கால்நடை வைத்திய அதிகாரி பதவி” எனும் சொற்றொடர் மிகத் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணபம் கோரல் முடிவுத் திகதி 2025.10.18 ஆந் திகதியாகும்.

**குறிப்பு** : விண்ணப்பம் அல்லது அது தொடர்பான கடிதம் ஏதும் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எத்தகைய முறைப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவுத் திகதி வரை விண்ணப்பத்தினை தாமதப்படுத்துவதால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரரே பொறுப்பாவர். அடிப்படை தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(1) **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

i. கால்நடை வைத்திய அதிகாரி பதவிகளில் நிலவும் வெற்றிடங்களின் பொருட்டு பேராதனை பல்கலைக்கழகத்தின் மிருக வைத்தியப் பீடத்தினால் வெளியிடப்படும் திறமை அட்டவணைக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து மிருக வைத்தியத்தில் பட்டத்தகைமையை பெற்றுள்ள விண்ணபகாரார், இலங்கை மிருக வைத்தியச் சங்கத்தில் பதிவு செய்வதன் பொருட்டு தகைமையை பூரணப்படுத்துகின்ற ஆண்டிற்கு உரியவாரு பதிவு செய்துள்ள திகதி ஒழுங்கிற்கு அமைய திறமை அட்டவணையில் உட்படுத்தப்படும்.

ii. வெற்றிட எண்ணிக்கையில் நூற்றிப்பத்து (110%) வீதத்திற்கு சமனான விண்ணப்பகாரர்கள்

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, திறமை அட்டவணை ஒழுங்கிற்கு அமைய வெற்றிட எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக் கையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

iii. நியமனம் செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயல்வலுப்பெறும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய தீர்மானிக்கப்படும்.

(2) **பணிக்கமர்த்துவதற்கான சேவை நியதிகளும் நிபந் தனைகளும் :**

i. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித் துடையதுமாகும். உமக்கு உரிய ஓய்வூதிய திட்டம் முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படுகின்ற கொள்கை தீர்மானத்திற்கு நீர் உட்படுத்தப்பட்டுள்ளீர். மேலும், நீர் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும். தாங்கள் காலத்துக்கு காலம் அரசாங்கம் பிரகடனப்படுத்தும் விதத்தில் இந்த நிதியத்துக்கு உதவு தொகைகள் செலுத்துதல் வேண்டும்.

ii. தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர் இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் கால்நடை வைத்திய அதிகாரி பதவி வெற்றிடம் நிரப்பும் பொருட்டு நியமனம் செய்யப்படுவார்.

iii. பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்ப தாரர், 2020.10.16 ஆம் திகதிய பொ.நி.சு. இலக்கம் 18/2020 இற்கு அமையவும் மற்றும் அதற்கு துணையாகவுள்ள சுற்றறிக்கைகளுக்கு அமைய உரிய மட்டத்தில் மொழி தொடர் பான தேர்ச்சி மட்டத்தினை அடைந்து கொள்ளல் வேண்டும். உமது ஆட்சேர்ப்பு மொழிமூலமானது நீங்கள் பட்டப்படிப்பை மேற்கொண்ட மொழி மூலமாகும். அரசகரும மொழி அல்லாத மொழியில் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஏதாவது அரச கரும மொழி ஒன்றில் III ஆவது தேர்ச்சி மட்டத்தை அடைதல் வேண்டும்.

iv. சகல விண்ணப்பகாரரும் இலங்கையில் எந்த வொரு பிரதேசத்திலும் கடமை மேற்கொள் வதற்கு உட்பட்டுள்ளீர்.

v. ஏனைய சேவை நியமனத்திற்கான நியதி களும் நிபந்தனைகளும் 2013.12.13 ஆம் தேதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை பிரமாணம், மற்றும் இலங்கை குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஒழுங்குவிதிகள் மற்றும் அவ்வப்போது அரசினால் வெளியிடப்படும் பொதுநிர்வாக சுற்றறிக்கைகளுக்கு அமையவும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும், நிதிப்பிரமானங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இப்பதவி உட்படுத்தப்படும்.

(3) **சம்பளத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய இலக்கம் 10/2025 இனைக் கொண்ட பொ.நி.சுற்றிறக்கையின் உப அட்டவணை I இற்கு அமைய இப்பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 82,150 - 10x2400 - 8x2940 - 17x3900 – ரூபா 195,970.00 (SL-I-2025) ஆகும். உமக்கு வேதனம் வழங்கப்படுவது அந்த சுற்றறிக்கையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள வாறாகும்.

(4) **கல்வித்தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட மிருக வைத்திய துறையில் பட்டத்தை பெற்றிருத்தல்.

(5) **வயது எல்லை :**

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 21 இற்கு குறையாமலும் 35 இனை விஞ்சிவிடாமலும் இருத்தல் வேண்டும்.

(6) **உடற்தகைமை** :

i. சகல விண்ணப்பகாரரும் தீவின் எப்பாகத்திலும் சேவையில் ஈடுபடக்கூடியவராக இருப்பதற்கு போதிய உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டவராக இருப்பதுடன், உடற்றகுதி வைத்திய பரிசீலனைச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(7) **ஏனைய தகைமைகள்** :

i. சகல விண்ணப்பகாரரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. சகல விண்ணப்பகாரரும் சிறந்த குனவியல்பு உள்ளவராக இருத்தல் வேண்டும்.

iii. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று, இலங்கை கால்நடை வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டியதுடன் இந்தப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டு தேவையான சகல தகைமைகளையும் சகலவிதத்திலும் பூர்த்தி செய்து இருத்தல் வேண்டும்.

(8) **நேர்முகப் பரீட்சை :**

8.1. பொதுவான நேர்முகப்பரீட்சை. (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது).

மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்கு : ஆட்சேர்ப்புச் செய்யப்படும் ஒழுங்குவிதி மற்றும் அதற்கு இணையாக வெளியிடப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற தகைமை களை கொண்டிருக்கின்றாரா என்பதை பரீட் சித்துப் பார்ப்பதற்கும் மற்றும் உடற் தகைமையை பரீட்சித்துக் கொள்வதற்கும் ஆகும்.

09. **விண்ணப்பிக்கும் முறைமை :**

i. விண்ணப்பம் 22-29 செ.மி. அளவிலான A4 கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி மாதிரி படிவத்திற்கு அமைய தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

ii. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

(a) தேசிய ஆளடையாள அட்டை / அங்கீகரிக் கப்பட்ட கடவுச் சீட்டு

(b) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்

(c) பட்டம் மற்றும் உரிய ஏனைய சான்றிதழ்கள்

(d) அண்மையில் பெற்றுக் கொண்ட நற்சான்றி தழ்கள் இரண்டு. (அதில் ஒன்று உள்விவகார சுற்றறிக்கை 03/2020 இற்கமைய வதிவிட பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரிடம் இருந்து பெற்றுக் கொண்டுள்ள DS4 சான்றிதழாக இருத்தல் வேண்டும்).

(e) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சித்தியடைந்துள்ள அதி உயர் பரீட்சை களினதும் சான்றிதழ்கள்.

(f) மிருக வைத்தியராக மிருக வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்.

10. **ஏனைய ஒழுங்குவிதிகள் :**

i. இவ்வர்த்தமான அறிவித்தலில் ஒழுங்குவிதிகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்படாத விடயங்களில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரித்தாகும்.

ii. வெற்றிடங்களினை நிரப்புதல், நிரப்பாமல் விடுதல் அல்லது ஒரு பகுதியினை மாத்திரம் நிரப்புதல் போன்ற விடயத்தில் இருதித் தீர்மானம் எடுக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கே உரியதாகும்.

iii. இவ்வர்த்தமான அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையே ஏதும் வேறுபாடு நிலவுமேயாயின் இங்கு சிங்கள மொழி மூலமே மேலோங்கி நிற்கும்.

iv. விண்ணப்பகாரர் ஒருவருக்கு தகைமை இல்லை என தெரியவந்தால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

v. விண்ணப்பகாரரால் சமர்பிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு தகவல் உண்மைக்கு புறம்பாக சமர்பிக்கப் பட்டிருப்பது தெரியவரின் அல்லது ஏதாவது முக்கிய தகவல் ஒன்றினை அவர் வேணும் என்றே மறைத்து இருப்பாரேயாயின் அவர் சேவையில் நின்றும் நீக்கப்பட இடமுண்டு.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய,

செயலாளர்,
விவசாய, கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு.

2025, செத்தெம்பர் 19.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் III ஆம் தரத்தில் கால்நடை வைத்திய அதிகாரி பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம்**

அலுவலக பயன்பாட்டிற்காக

| |
|---|
| |

01. I. முதலெழுத்துக்களுடன் பெயர்
தமிழில் : ..........................................................................................................................
ஆங்கிலத்தில் (தனிப் பேரெழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | |

II. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் ஆங்கிலத்தில் (தனிப் பேரெழுத்துக்களால்)

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | |

02. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

03. தபால் முகவரி : ..........................................................................................................................................................
..........................................................................................................................................................
(முகவரியில் ஏதும் மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கவும்).

04. நிரந்தர வதிவிடத்துக்குரிய

I. மாகாண சபை : ....................................................................
II. மாவட்டம் : .....................................................................

05. தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிலையான | | | | | | | | | | |
| கையடக்க | | | | | | | | | | |

06. பிறந்த திகதி: ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி: [ | ]

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள்: [ | | | ] மாதங்கள்: [ | ] நாட்கள்: [ | ]

07. (அ) நீர் இலங்கைப் பிரசையா? : ..........................................................................................................................

சாகியம் (சிங்களம்/இலங்கைத் தமிழ்/இந்தியத் தமிழ்/முஸ்லிம்/ஏனைய) ..................................................................

08. (அ) பால் : ஆண்/பெண் ..........................................................................................................................................

(ஆ) விவாகமானவர்/விவாகமாகாதவர்/விவாகரத்தானவர் :...........................................................................................

09. கல்வித் தகைமைகள் :

| *பட்டம்/பட்டப் பின் படிப்பு* | *வகுப்பு* | *பல்கலைக்கழகம்* | *பட்டத்தை பூரணப்படுத்திய திகதி* |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

10. இலங்கை மிருக வைத்திய சபையில் பதிவு செய்த இலக்கமும் திகதியும் : ..........................................................................

11. சேவை விபரம் (தற்போது நிரந்தரப் பதவி வகிப்பதாயின்)

| *தற்போதைய பதவி* | *சேவைக் காலம்* | | *சேவை நிலையம்* | *மாவட்டம்/மாகாணம்* |
|---|---|---|---|---|
| | *முதல்* | *வரை* | | |
| 1<br>2<br>3 | | | | |

12. இவ்விண்ணப்பத்தில் என்னால் சமர்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், சரியானதும் என்பதை இங்கு உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானவை என நான் தெரிவு செய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவு செய்ததன் பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். எந்தவொரு நீதிமன்றத்தினாலும் குற்றவாளியாகவில்லை என்பதை இத்தால் உறுதி மொழிந்து எனது வழமையான கையொப்பத்தை இட்டு இத்தால் சான்றளிக்கின்றேன்.

திகதி : ........................

.......................................................
விண்ணப்பதாரரது கையொப்பம்.

---

(தற்போது அரசாங்கத்தில் நிரந்தரப் பதவி ஒன்றிலுள்ள விண்ணப்பதாரருக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்)

**திணைக்களத் தலைவரது சான்றிதழ்**

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி…….....................………………..........................................................
இத்திணைக்களத்தில்/மாகாண சபையில் ..........................................................எனும் பதவியில் உள்ளவர் எனவும், விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் அவரது பெயர்வழிக் கோப்பிற்கு அமைவாக உண்மையானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இப்பதவியின் நிமித்தம் இவ்வுத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுமிடத்து அவர் இம்மாகாண அரச சேவையில் இருந்து விடுவிப்பு செய்ய முடியும்/முடியாது என்பதை அறியத் தருகின்றேன்.

………………………………………….
திணைக்கள/நிறுவனத் தலைவர்
(பதவி முத்திரை)

திகதி : ...............................

முகவரி : ………………………………..

09-199

## இலங்கை நிரந்தர கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவில் கடலோடிகளுக்கான வெற்றிடங்கள்

1. கடலோடிகளை ஆட்சேர்ப்பதற்கான இலங்கை நிரந்தர கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவிற்கு பின்வரும் தகைமைகளையுடைய ஆண் மற்றும் பெண் விண்ணப்ப தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர கடற்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளைக் கட்டாயமாகப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(அ) குடியுரிமை – ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது – 2025, ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறை யாமலும் 24 வயதிற்கு மேற் படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) உயரம் – ஆண் 5' 5" (165.10 செ.மீ)
பெண் 5' 2"(157.48 செ.மீ)

(ஈ) உடல் திணிவுச் சுட்டி – 17- 27

(உ) மார்பு – (ஆண்) 32" (81.28 செ.மீ).

(ஊ) பார்வை வர்ணப்பதிவு மட்டம் – STD II

(எ) தொலை பார்வை – இடக்கண் 6/6 மற்றும் வலக்கண் 6/6 (மூக்குக் கண்ணாடிகள் மற்றும் கண்ணாடி வில்லைகள் பயன்படுத்தாமல்)
(6/12 பார்வை வர்ணப்பதிவு மட்டம் மூக்குக் கண்ணாடி கள் மூலம் 6/6 வரை சரிசெய்யப் பட்டுள்ள விண்ணப்பதாரிகளைக் (ஆண்/பெண்) வனத்தில்கொள்ள லாம்.

(ஏ) குடியியல் நிலை – விண்ணப்பதாரிகள் திருமண மாகாதவர்களாக இருத்தல் வேண்டும். எந்தவொரு ஆட்சேர்ப் புச் செய்யப்பட்டவரும் பயிற்சி காலத்தின் போது திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார் கள்.

2. **வெற்றிடங்கள் (பிரிவுகள்) :**

(அ) ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் அல்லது இலங்கை கடற்படை தொழில்நுட்ப நிறுவகம் ஆகியவற்றால் வழங் கப்படும் மூன்று வருட முழு நேர தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா பயிற்சிநெறிக்காக பின்வரும் பிரிவுகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப் படுவார்கள்.

(1) தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (கடல் சார் பொறியியல்)
(2) தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (மோட்டார் வாகனப் பொறியியல்)
(3) தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (மின் பொறியியல்)
(4) தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (மின்னியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல்)
(5) தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (கப்பலின் கட்டுமானம் பொறியியல்)

3. **கல்வித் தகைமைகள் :**

அ. க.பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டு அமர்வு களுக்கு மேற்படாத தடவைகளில் கணித பாடத்தில் திறமைச் சித்தியுடன் தாய்மொழி, ஆங்கிலம், மற்றும் விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. க.பொ.த(உ.த)பரீட்சையில்

(1) பௌதீக விஞ்ஞானத் துறையில் தோற்றுதல் அல்லது
(2) உயிரியல் விஞ்ஞானத் துறையில் தோற்றுதல் அல்லது
(3) தொழில்நுட்பத் துறையின் கீழ் தொழில்நுட்ப வியல் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களுக்கு சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

4. மேற்படி பந்தி 1 மற்றும் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்ப தாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், பார்வை மற்றும் நிறை என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட உயரம், பார்வை மற்றும் நிறை ஆகிய தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். சேவையில் சிறப்புத்திறமை மதிப்பொன்றைக் கொண்டிருக்கக்கூடிய எந்தவொரு விண்ணப்பதாரியும் இலங்கைக் கடற்படை தளபதியின் விருப்புரிமையினால் அவர் தேவையான உயரத்தைக் கொண்டிராவிடினும் கருத்திற்கொள்ளப்படுவார்.

5. **சேவை நிபந்தனைகள் :**

அ. விண்ணப்பதாரிகள் பயிலுநர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், அவர்கள் அடிப்படை பயிற்சிப் பாடநெறிகளுக்கு உட்படுத்தப்பட தேவைப்படுத்தப்படுகின்றனர்.

ஆ. பயிற்சி காலப்பகுதியின் போதும் மற்றும் பின்னரும், பயிலுநர்கள் கடற்படை சட்டத்திற்கு உட்பட்டவர்களாவர்.

இ. ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அனைவருக்கும் ஏனைய பொருட்களுடன் சீருடைகள் வழங்கப்படும்.

ஈ. பயிற்சி காலப்பகுதியின் போது, பயிலுநர்களுக்கு வதிவிட வசதிகள் மற்றும் உணவு என்பன இலங்கை கடற் படையினால் வழங்கப்படும்.

உ. பயிற்சி காலப்பகுதியின் போது, பயிலுநர் ஒருவர் அவரின் விருப்பத்தின்பேரில் கடற்படையிலிருந்து விலகிச்செல்ல வேண்டி ஏற்பட்டால், அவரின் பயிற்சிக்காக இலங்கை அரசாங்கத்தினால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களையும் இலங்கை அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டும்.

ஊ. பயிற்சி காலப்பகுதியின் போது, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் பயிலுநர் ஒருவரின் தவறான நடத்தையின் காரணமாக அல்லது அவர் பொறுப்பாகவுள்ள ஏனைய ஏதேனும் காரணத்திற்காக, அவர் கடற்படைச் சேவைக்கு தகுதியற்றவர் என பொறுப்புடைய அதிகாரிகள் தீர்மானிப்பார்கள் எனின், அந்தச் சந்தர்ப்பத்திலேயே சம்பந்தப்பட்ட பயிலுநர் அதுவரை அவர் தனக்காக மேற்கொள்ளப்பட்டஅனைத்து செலவினங்களையும் இலங்கைக் கடற்படைக்கு திருப்பிச் செலுத்துவதற்கு ஒப்புக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதிநிதியான கடற்படை தளபதியுடன் ஒரு பிணை ஒப்பந்தத்தில் ஈடுபடல் வேண்டும்.

எ. கடமைகளுக்காகவோ அல்லது பயிற்சிக்காகவோ, அனைத்து கடலோடிகளும் இலங்கையின் ஏதேனும் ஒரு பகுதிக்கு அல்லது ஒரு வெளிநாட்டிற்கு இணைப்பட்டிருப்பதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

6. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்** - தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்தின் கீழ்வரும் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்கனவேயுள்ள மற்றும் சட்டமாக்கக்கூடிய அனைத்து கட்டளைகள் மற்றும் சட்டவாக்கத்திற்கும் கீழ்ப்படிய வேண்டும்.

7. **சம்பளங்களும் படிகளும் :**

05/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கிணங்க 2025.04.01 ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். அதற்கிணங்க,

அ. அடிப்படை சம்பளம் – ரூபா.45,037.00

ஆ. வாழ்க்கைச் செலவு படி – ரூபா.17,800.00

இ. சீருடை சுத்தம் செய்தல் படி – ரூபா.350.00

ஈ. கஷ்டப் பிரதேசப்படி (தொழிற்பாட்டுப் பிரதேசங் களுக்காக) -அடிப்படை பயிற்சிக்குப் பின் உரித்துடையது.

உ. கஷ்டப் பிரதேசப்படி (தொழிற்பாட்டல்லாத பிரதேசங்களுக்காக) - அடிப்படை பயிற்சிக்குப் பின் உரித்துடையது) வேறு படிகள்
– விசேடப் படி – ரூபா.1000.00
– விசேட மேலதிகப் படி – ரூபா. 2,400.00

ஊ. மொத்த சம்பளம் – ரூபா. 66587.00

எ. உணவு கொடுப்பனவு உட்பட(சந்தர்பத்திற்கு அமைய - ரூபா. 29025.00

ஏ. மொத்த சம்பளம் தோராயமாக (உணவு கொடுப்பனவு உட்பட) – ரூபா.95,612.00

ஐ. ஆண்டொன்றிற்கு மூன்று சோடி புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்கப்படும் (கடலோடி, மனைவி, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப் போருக்கு ஏற்புடையதாகும்.)

ஒ. முகாமில் வசிக்கும் கடலோடிகளுக்கு மாதமொரு தடவை படைவீரர்கள் தங்குமிடத்திலிருந்து அவர்களின் வீட்டிற்கு போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டு அல்லது பேரூந்து கட்டணம் செலுத்தப்படும்.

ஓ. இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படும் (கடலோடி, மனைவி, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப்போருக்கு ஏற்புடையதாகும்.)

ஔ. அரசாங்க குடிமனைகளில் வசிக்காத திருமண மான கடலோடிகள் ரூ.2,400.00 முதல் ரூ.6,600.00 வரையான வீட்டு வாடகைக் கொடுப்பனவிற்கு உரித்துடையவர்களாவர்.

ஃ. திருமணமான கடலோடிகளுக்காக ஒதுக்கப் பட்டுள்ள குடிமனைகளிலுள்ள வெற்றிடங் களுக்கு ஏற்ப திருமணமான கடலோடிகளுக்கு குடிமனைகள் வழங்கப்படும். அரச உத்தி யோகத்தர்களுக்கு ஏற்றவாறு வாடகை அறவிடப் படும்.

க. அடிப்படைப் பயிற்சிக்குப் பின்னர், வெளியே வசிக்கும் திருமணமான கடலோடிகளுக்கு ரூபா 29025.00 உணவு கொடுப்பனவாக வழங்கப்படும்.

8. **சலுகைகள்:**

கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவில் உள்ள கடற்படைவீரர்களுக்கு விசேட பதவி உயர்வு நடைமுறை பின்பற்றப்படுகிறது. இதற்கமைய, கடற்படை தொழில்வினைஞர்களுக்கு நிலவும் வெற்றிடங்களை அடிப்படையாகக் கொள்ளாத பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உண்டு.

9. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

அ. விண்ணப்பதாரி மாதிரி விண்ணப்பப்படிவத்திற் கிணங்க தெளிவான கையெழுத்தால் தன்னால் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2025, ஒற்றோபர் மாதம் 10 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பு), கடற்படைத் தலைமையகம், த.பெ. இல. 593, கொழும்பு எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில்வினைஞர் கடலோடிகளின் ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தேவைப் பாடுகளுக்கு அமையாத விண்ணப்பங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலதிக விபரங் களுக்கு, 011-7195162, 011-7195155, 076-0275685 ஆகிய இலக்கங்களைத் தொடர்பு கொள்ளவும் அல்லது www.navy.lk எனும் இணைய தள முகவரிக்கு பிரவேசிக்கவும்.

ஆ. அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனங்களில்/ சபைகளில்/ குடியியல் தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தமது திணைக்களத்தின்/ கூட்டுத்தாபனங்களின்/ சபை களின்/ குடியியல் தாபனங்களின் தலைமை அதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும் மற்றும் விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவார் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. பரீட்சார்த்திகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் போது அல்லது அவ்வாறு செய்ய வேண்டும் எனக் கூறப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ்;
2. விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளைக் கொண்ட சான்றிதழ்கள்;
3. பாடசாலை விடுகைச் சான்றிதழ்;
4. கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் (விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து 6 மாத காலத்திற்குள் பெறப்பட்டது);
5. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட தொழில்சார்/தொழிநுட்பப் பயிற்சி மற்றும்/அல்லது அனுபவச் சான்றிதழ்கள் (ஏதெனும் இருப்பின்);
6. அண்மையில் பெறபட்ட மூன்று நன்னடத்தை சான்றிதழ்கள். அதில் ஒன்று இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்தும் மற்றையது விண்ணப்பதாரியை இரண்டு வருடங்களுக்கு மேலாக தெரிந்த ஒருவரிடமிருந்து அல்லது தொழில் புரியும் நிருவனத்தில் இருந்து (தொழில் புரிபவராயின்) பெறப்பட்ட சான்றிதல் அவசியம்.
7. விளையாட்டு மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான சான்றிதழ்கள்

ஈ. ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டப்படும் போது சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்திகளின் விண்ணப்பப் படிவங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

உ. விண்ணப்பப்படிவத்துடன் ஆவணங்கள் அல்லது ஆவணங்களின் மூலப் பிரதிகள் இணைக்கப்பட லாகாது.

ஊ. விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படும் சான்றி தழ்களின் ஏதேனும் மூலப் பிரதிகள் காணாமற் போனால் இலங்கை கடற்படை அதற்குப் பொறுப்பாகாது.

10. தேர்வுக்கு முன்னர் அவருடைய விண்ணப்பப் படிவத் தில் உள்ள ஏதேனும் ஒரு கூற்று தவறானது எனக் கண்டறியப்பட்டால் விண்ணப்பதாரி தகைமை இன்மைக்கும் தேர்வுக்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அவர் பதவி நீக்கத்திற்கும் உரித்தாக்கப்படுவார்.

11. **தெரிவு செய்தல்/நேர்முகப் பரீட்சைத் தேர்வுகள் முதலியவை** :

அ. மேற்குறித்த நிபந்தனைகளைப் பூர்த்திசெய்கின்ற விண்ணப்பதாரிகள் இலங்கைக் கடற் படையினால் பரிந்துரை செய்யப்பட்ட ஆரம்ப நிலை மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னர் தேர்ச்சிபெற்ற விண்ணப்பதாரிகள் தேர்வுக் குழு ஒன்றின் முன்னிலையில் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு தோற்ற வேண்டும். அவ்வாறு தேர்ச்சிபெற்ற விண்ணப்பதாரிகள் பின்வரும் உடல் தகைமை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

ஆ. உடற் தகைமைப் பரிசோதனையில் தேர்ச்சி பெறுவதற்கான தேவைப்பாடுகள்

| *உடற் பயிற்சி* | *நேரம் (நிமிடங் கள்/ செக்கன் கள்)* | *ஆண்* | *பெண்* |
|---|---|---|---|
| 1600மீ. ஓட்டம் | | 09 நிமிடங்கள் | 11 நிமிடங்கள் |
| Push Up | 01நிமிடம் | 12 அல்லது அதற்கு மேல் | 08அல்லது அதற்கு மேல் |
| Sit Up | 01நிமிடம் | 10அல்லது அதற்கு மேல் | 07அல்லது அதற்கு மேல் |

இ. உடற்தகைமை பரிசோதனையில் சித்திபெற்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் கடற்படை மருத்துவ சபையின் முன் தோற்ற வேண்டும். தகுதிபெறும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் இலங்கை கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவில் பயிலுனர் கடலோடிகளாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

ஈ. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சையின் திகதி, நேரம் மற்றும் இடம் பற்றி வட்ஸ்அப் (WhatsApp) மூலம் அறிவிக்கப்படும். தபால் அல்லது வேறு எந்த வகையிலும் அறிவிக்கப்படமாட்டாது. இது தொடர்பான போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

உ. விண்ணப்பதாரி ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அவருடைய ஆளடையாள அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஊ. விண்ணப்பதாரி ஒருவரைப் பரிந்துரை செய்ய விரும்பும் எவரேனும் ஒருவர் அவருக்கு நற்சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு பரிந்துரை செய்தல் வேண்டும். ஏதேனும் வகையிலான ஆதரவளித்தல் அல்லது விண்ணப்பதாரி ஒருவரின் தெரிவில் செல்வாக்குச் செலுத்தல் என்பன அத்தகைய விண்ணப்பதாரியின் தகைமையின்மைக்கு வழிவகுக்கும்.

எ. ஆட்சேர்ப்புக்குத் தெரிவு செய்யப்படாத விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

ஏ. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த கல்விச் சான்றிதழ்கள் மற்றும் தொழில்முறைத் தகுதிகள் அவற்றின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காக பரீட்சை திணைக்களம் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு அவற்றின் நம்பகத்தன்மை உறுதி செய்யப்படும்.

ஐ. அனைத்து விண்ணப்பதாரர்களின் பாதுகாப்பு இசைவுச் சான்றிதழ்கள் இலங்கை கடற்படைத் தலைமையகத்தால் மீள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்படும்.

ஒ. இலங்கை கடற்படைக் கட்டளைத்தளபதி, இலங்கை கடற்படையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்கின்ற செயன்முறையின் இறுதித் தீர்மானங்களை மேற்கொள்கின்ற தத்துவத்தைக்கொண்டிருப்பதுடன், தேசிய பாதுகாப்பு, இராணுவ மற்றும் இலங்கை கடற்படையின் நிர்வாகம்சார் தேவைப்பாடுகள் ஆகியவற்றுக்கேற்ப இலங்கை கடற்படைக் கட்டளைத்தளபதி மேற்படி தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான இறுதித் தீர்மானம் மேற்கொள்கின்ற தற்றுணிவினைக்கொண்டிருப்பார்.

*குறிப்பு* – இவ் வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் தெளிவின்மை காணப்படும் போது சிங்கள மொழி மூலமான வாசகங்கள் மேலோங்கிக் காணப்படும்.

ஏகேஎஸ்பீ பானகொட, ஆர்எஸ்பீ,
யுஎஸ்பீ, என்டீசீ, பீஎஸ்சீ,
துணைக் கடற்படைத் தளபதி,
கடற்படைத் தளபதி.

இலங்கை கடற்படைத் தலைமையகம்,
த.பெ.593
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தரக் கடற்படையில் தொழில்வினைஞர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம்**

1. குடியுரிமை.........................................................................................................................................
(இலங்கைப் பிரசையாவது பரம்பரை மூலமா அல்லது பதிவின் மூலமா என்பதைக் குறிப்பிடுக மற்றும் பதிவு மூலமான பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும், திகதியையும் குறிப்பிடவும்)

2. விண்ணப்பிக்கும் பிரிவு (முன்னுரிமை அடிப்படையில்): ……………………………………………………………………………………...............................
.............................................

3. முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) ............................................................................................................................................................

4. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

5. நிரந்தர முகவரி:

6. தபால் முகவரி:

7. பிறந்த திகதி:..........................................................

8. வயது வருடங்கள் : ............... மாதங்கள். : .......... நாட்கள்: .........(2025, ஒற்றோபர் மாதம் 10 ஆம் திகதிக்குள்)

9. உயரம்:..............................,(அடி மற்றும் அங்குலங்கள்) மார்பு:.......................,(அங்குலங்கள் -ஆண் மாத்திரம்) நிறை:.......................,(கி.கி)

10. நிரந்தர முகவரிக்கு அண்மையில் உள்ள பொலிஸ் நிலையம்:.......................................,

11. மாவட்டம்:.......................................................

12. தேர்தல் தொகுதி:.........................................

13. கிராம அலுவலர் பிரிவு:............................................

14. தொலைபேசி இலக்கம்:...........................................

15. வட்ஸ்அப் இலக்கம்(WhatsApp)

16. விவாகமானவரா/விவாகமாகாதவரா :......................................................

17. பால்:........................................................

18. கல்விகற்ற பாடசாலைகள் (ஒழுங்கு அடிப்படையில்)

19. கல்விகற்ற பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| *பாடசாலை/ பல்கலைக்கழகத்தின் பெயர்* | *தோற்றியுள்ள பரீட்சை* | *பரீட்சைக்கு தோற்றிய வருடம்* | *சித்தியடைந்த பாடங்கள் (தரம் உள்ளடங்கலாக)* |
|---|---|---|---|
| | க.பொ.த(சா./த.):<br>க.பொ.த(உ./த.):<br>வேறு: | | |

| *பாடசாலையின் பெயர்* | *க.பொ.த (உ./த.) பரீட்சையில் தோன்றியபாடம்* | *பரீட்சைக்கு தோற்றிய வருடம்* |
|---|---|---|
| | பௌதீகவியல் பிரிவு<br>உயிரியல் பிரிவு<br>தொழில்நுட்பப்பிரிவு | |

20. பாடசாலை/ பல்கலைக்கழகத்திலிருந்து விலகிய பின்னர் செய்த தொழில் பற்றிய விபரங்கள் :- (ஏற்புடையதாயின்)

| *தொழில்வழங்குநரின் பெயர் மற்றும் முகவரி* | *தொழிலின் தன்மை* | *சேவைக்காலம்* | |
|---|---|---|---|
| | | *இருந்து* | *வரை* |
| | | | |

21. பெற்றோர் பற்றிய விபரங்கள்

| *முழுப்பெயர்* | *பிறந்த இடம்* | *தொழில்* | *தற்போதைய முகவரி* |
|---|---|---|---|
| தந்தை<br>தாய் | | | |

22. இப் பதவி தொடர்பான ஏதேனும் விஷேட தகைமை :
..............................................................................................................................................................

23. விளையாட்டுக்களில் தற்போதைய சாதனைகள் பற்றிய விபரங்கள் (பங்குபற்றிய குழுக்கள் மற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களை திகதிகள் / வருடங்கள் ஏனையவற்றுடன் பெற்றுக் கொண்ட தரநிலைகள்/மட்டங்களுடன் குறிப்பிடுக.)
..............................................................................................................................................

24. பாடசாலையில்/ பல்கலைக்கழகத்தில் அல்லது வெளி நிறுவனங்களில் பெற்றுக்கொண்ட ஏனைய சாதனைகள் (திகதிகள்/ வருடங்கள் ஏனையவற்றுடன் விபரங்களைக் குறிப்பிடவும்)

25. ஆயுதந் தாங்கிய படை அல்லது தொண்டர் படை, பயிலிளவல் படையணி அல்லது இளைஞர் சாரணர் அமைப்பு ஆகியவற்றில் முன்னைய ஏதேனும் சேவைகள்:

26. இலங்கை கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதந் தாங்கிய படை அல்லது பொலிஸ் ஆகியவற்றில் இணைந்து கொள்வதற்காக ஏற்கனவே விண்ணப்பித்துள்ளீர்களா? அவ்வாறாயின், அது தொடர்பான விபரங்களையும் அத்தகைய விண்ணப்பங்களின் பெறுபேற்றினையும் குறிப்பிடுக.

27. இராணுவம், கடற்படை அல்லது விமானப்படை என்பவற்றில் நிரந்தர அல்லது தொண்டர் படையினராக ஏற்கனவே சேவைபுரிந்திருந்தால், தயவுசெய்து சேவைக்காலத்தையும், நீங்கள் வகித்த பதவியையும் குறிப்பிடுக.

28. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றில் தண்டிக்கப்பட்டு அல்லது பிணிக்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுக.

29. அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது அரசாங்க துறை/ சபை/ கூட்டுத்தாபனம் (அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்ற மத்திய வங்கி, தேசிய வங்கிகள், பல்கலைக்கழகங்கள், கூட்டு இருப்புக் கம்பனிகள் உள்ளடங்கலாக) ஆகியவற்றில் ஏலவே சேவையில் ஈடுபட்டிருப்பின், அத் தொழிலை முடிவுறுத்தியமைக்கான காரணங்கள்

30. நன்நடத்தைச் சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| *பெயர்* | *பதவி* | *தபால் முகவரி* |
|---|---|---|
| | | |

31. விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப்பட வேண்டிய உறுதிமொழி :

மேற்குறித்த வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட பதில்கள் எனது அறிவிக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தொழில்வினைஞர்கள் (Artificers) பிரிவுக்கு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் தொடர்பாக பிரயோகிக்கப்படும் விதிகளையும், பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளையும் வாசித்துப் புரிந்து கொண்டேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ................................................. ....................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

உங்களாள் பூர்த்தி செய்யபட்ட விண்ணப்பப்படிவத்தினை பதிவு அஞ்சல் மூலம் (குறித்த தொடர்புடைய ஆவணங்களின் நகல்களுடன்) முகவரிக்கு அனுப்பவும்.

மூத்த பணிப்பாளர் அதிகாரி ( ஆட்சேர்ப்பு ),
கடற்படை தலைமையகம்,
அஞ்சல் பெட்டி 593,
கொழும்பு 01.

மேலதிக விபரங்களுக்கு : தொலைபேசி 011-7195155,011-7195162 மொபைல்: 076-0275685

09-241

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## மேலைத்தேய சங்கீதம் செய்முறைப் பரீட்சை – 2024 (2025)

### I ஆம் தரத்திலிருந்து VIII ஆம் தரம் வரையிலான டிப்ளோமா

ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படும் மேற்படி பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பரீட்சை 2025 திசெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் Our Services என்பதன் கீழ் உள்ள Online Applications Recruitment Exams ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்கள் நிகழ்நிலையில் (Online) மாத்திரமே சமர்ப்பிக்கப்பட முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் 2025, செத்தெம்பர் 19 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறக்கப்படுவதுடன் 2025, ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு மூடப்படும். விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலையில் சமர்ப்பித்ததன் பின்னர் அதனைப் பதிவிறக்கம் செய்து அச்சுப் பிரதியில் உரிய பகுதியை கையெழுத்தில் நிரப்பி விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி, உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை பரீட்சைத் திணைக்களத்துக்குக் கிடைக்கத்தக்கவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,<br>நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,<br>பெலவத்த, பத்தரமுல்ல.

2. **தகைமைகள்:**

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்கும் தரம் அல்லது டிப்ளோமாவிற்கு உரிய எழுத்துப் பரீட்சையில் சித்திடைந்திருத்தல் கட்டாயமானதாகும்.

(குறிப்பு : விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியுடன் உரிய சான்றிதழ்களின் பிரதிகளை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.)

3. **பாடத்திட்டம்:**

பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 1993 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் விதத்தில் வெளியிடப்பட்டுள்ள பாடத்திட்டத்திற்கு அமைய இப்பரீட்சை நடாத்தப்படும். பாடத்திட்டத்தை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

4. **விண்ணப்பித்தல்:**

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரியால் நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப்படும் மென்பிரதி, பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படும் அச்சுப் பிரதி (Printout) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்துக்குக் கிடைத்த பின்னர் மென்பிரதி அச்சுப் பிரதியுடன் சரிபார்க்கப்படுவதுடன், (Verify) செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவமாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டமை/ ஏற்றுக்கொள்ளப்படாமை பற்றி முறைமைக்கு உள்நுழைவதற்காகப் பயன்படுத்திய செல்லிடத் தொலைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் (e-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தல் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தும்போது அவ்வறிவுறுத்தல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுக. விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பங்கள் எதுமித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

05. **பரீட்சைக் கட்டணம்:**

இப்பரீட்சைக்குரிய கட்டணங்கள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| I – IV வரை ஒரு தரத்திற்கு | - | ரூ. 600.00 |
| V – VIII வரை ஒரு தரத்திற்கு | - | ரூ. 800.00 |
| Diploma (Teachers) | - | ரூ. 2000.00 |
| Diploma (Performers) | - | ரூ. 2000.00 |

பரீட்சைக் கட்டணம் செலுத்துகையில் நிகழ்நிலை இணைப்பில் தரப்படும் பின்வரும் ஏதேனுமொரு முறையில் மட்டுமே கட்டணம் செலுத்த முடியும் :

i. எந்தவொரு வங்கிக் கடனட்டை மூலம் (Any Bank Credit Card)

ii. இணையக் கொடுப்பனவு வசதியைக் கொண்ட எந்தவொரு வங்கி வரவட்டையின் மூலம் (Any Bank Debit Card with the facility of Internet Transactions)

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)

iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலமும் (Any Branch of the Bank of Ceylon) மூலம் செலுத்தப்படலாம்.

குறிப்பு :

(அ) மேற்குறித்த முறைகளின் மூலம் கொடுப் பனவு செய்யப்படும் விதம் தொடர்பான அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத் தல்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஆ) கொடுப்பனவுகள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக குறுஞ்செய்தி (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் ஊடாக அறிவிக்கப்படும். பரீட்சைக்குரிய மொத்தக் கட்டணமும் செலுத்தப்பட வேண்டிய துடன், குறைவாக அல்லது அதிகமாக பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு முறைகளின் ஊடாக பரீட்சைக் கட்டணங் களைச் செலுத்தும்போது ஏற்படும் பிரச் சினைகள் தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) எந்தக் காரணத்திற்காகவும் இப்பரீட்சைக் காகச் செலுத்தப்பட்ட கட்டணங்கள் வேறொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ அல்லது மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

6. **பரீட்சை அனுமதியட்டைகள் :**

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயக்கத்தினால் பரீட்சை அனுமதியட்டைகள் விநியோகிக்கப்படும். பரீட்சை அனுமதியட்டைகள் விநியோகிக்கப்பட்ட உடனேயே அது தொடர்பாக மின்னஞ்சல் ஊடாக / குறுஞ்செய்தி ஊடாக விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும். உரிய அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதியட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தி எவரேனும் இருப்பாராயின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை எண், முகவரி ஆகியவற்றை சரியாகக் குறிப்பிட்ட கோரிக்கைக் கடிதம் ஒன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரித்தல் மிகப் பயனுறுதி மிக்கதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனும் தகவலை உறுதிப்படுத்துவதற்காக பூரணப்படுத் தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் நிழற்பிரதி, விண்ணப்பப்படிவத்தைத் தபாலில் இடும்போது பதிவு செய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றைத் தயார் நிலையில் தம்வசம் வைத்திருப்பது பயனுடையதாயிருக்கும். பரீட்சை அனுமதியட்டையைப் பரீட்சித்துப் பார்த்து அதில் ஏதேனும் திருத்தங்கள் இருக்குமாயின், பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு விண்ணப்பத்திற்கமைய உரிய திருத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தங்களுக்காக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

7. பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும் சட்டதிட்டங்கள், விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர். அச்சட்டதிட்டங்கள், விதிமுறைகளை மீறினால், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்பட வேண்டியேற்படும்.

8. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம் :**

❖ பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்துக்குள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடங்களுக்காகவும் மேற்பார்வையாளர் திருப்தியடையும் விதத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அதேபோன்று பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் மற்றும் தகவல் தொடர்பாடல் உபகரணங்கள் பயன்பாட்டில் இல்லாததினை உறுதிப்படுத்தும் வகையில் தமது முகமும் காதுகள் இரண்டும் மூடப்படாத விதத்தில் பரீட்சை மண்டபத்துக்கு உட்பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்துக்குள்

அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்துக்குள் நுழைந்த சந்தர்ப்பத்தில் இருந்து பரீட்சை நிறைவுற்று பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியேறும் வரை பரீட்சார்த்திகள் தமது முகமும் காதுகள் இரண்டும் மூடப்படாத விதத்தில் இருத்தல் வேண்டும்.

9. **பெறுபேறுகள் :**

இப்பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும் அதேவேளை, பரீட்சையில் சித்தி யெய்தும் சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

10. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிகளுக் கிடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை காணப்படுவதாகக் கண்டறியப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிமூல அறிவுறுத்தலுக்கமைய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஏ. கே. எஸ். இந்திகா குமாரி லியனகே,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல,
2025, செத்தெம்பர் 10.

09-165

---

**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**நில அளவைத் திணைக்களம்**

இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்பமட்ட- பகுதிதேர்ச்சிபெற்ற சேவைத் தொகுதியில் நில அளவைக் கள உதவியாளர்கள் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை -2025

1.0 நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்பமட்ட- பகுதி தேர்ச்சி பெற்ற சேவை தொகுதியில் (PL - 02) நில அளவைக் கள உதவியாளர் பதவிகளுக்கு 2025, ஒற்றோபர் மாதத்தில் கொழும்பில் நடைபெறும் ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 **ஆட்சேர்ப்புக்கான பதவி** — **ஆட்சேர்ப்புத்தரம்**

நில அளவைக்கள உதவியாளர் — தரம் III

1.2 **பதவிக்கான கடமைகளின் தன்மை**

| *பதவிப் பெயர்* | *முக்கிய அலுவல்கள்* |
|---|---|
| நில அளவைக்கள உதவியாளர் | • அளவை தொடர்பான பருவரைபடம் கீற உதவுதல்.<br>• அளவைப்புலப் புத்தகங்கள் மற்றும் கிடைப்படங்களைப் பயன்படுத்தி பழைய எல்லைகளை அவதானிப்பதற்கு ஏதுவாக அளவைக் கோடுகளை தயாரித்தல்.<br>• அளவைதொடர்பான புலத்தில் முளைகளையும் எல்லைக் கற்களையும் திறந்து, நிறுவி அளவைக்காக தயார்படுத்தல்.<br>• நில அளவை தொடர்பான பீடக்குறிகளை இனங்காணவும் நிறுவவும் அளவையில் நில அளவையாளர்களுக்கு உதவுதல்.<br>• களத்தில் அளவைக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களை பேணவும், களஞ்சியப்படுத்தவும் உரிய பராமரிப்பு பணிகளில் உதவுதல்.<br>• தியோடோலைட்டுக்கள், மட்டங்கள் மற்றும் புதிய இலத்திரனியல் பூரணமானிகள் அடங்கலாகச் செய்மதித் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அளவைகளுக்கு களத்தில் அளவைப்புள்ளிகளில் புவிசார் இடமறியும் முறைமை (GPS) உபகரணங்களை நிலைநாட்டல்.<br>• வான் ஒளிப்படப்பிடிப்பிற்கு தேவையான புவிபார்த்த பார்வைப்புள்ளிகளை அமைப்பது தொடர்பான சகல கடமைகளிலும் உதவுதல்.<br>• அளவைத்தரவுகளை சேகரிக்கவும் அளவைகளில் தெரிவுசெய்யப்பட்ட எல்லா இடங்களின் மையங்களையும் மட்டங்களையும் தீர்மானிப்பதற்கு தேவையான இலக்குகளையும் அட்டவணைகளையும் முறையாக பேண உதவுதல். |

| *பதவிப் பெயர்* | *முக்கிய அலுவல்கள்* |
|---|---|
| | • அளவை நடவடிக்கைளில் சரியான தரவுகளை பயன்படுத்தி களத்தில் எல்லைக் கற்களையும் பீடக்குறிகளையும் நிறுவுதல்.<br>• புலவேலைப் புத்தகம் மற்றும் சுவடு வரைதல்களையும் பயன்படுத்தி பூர்வாங்க நடவடிக்கையாக காணித்துண்டுகளின் எல்லைக் குறியீடுகளை நிர்ணயிக்க உதவுதல்<br>• நில அளவையாளர் நாயகம் அல்லது அவரது பிரதிநிதியினால் ஒப்படைக்கப்படும் நில அளவை தொடர்பான எந்தவொரு கடமையிலும் ஈடுபடுதல்.<br>• நில அளவை கள உதவியாளர் தரத்தில் ஓவசியர் பதவி வகிப்போருக்கு மேற்குறித்த கடமைகளுக்கு மேலதிகமாக ஏனைய நில அளவை கள உதவியாளரின் பணிகளை மேற்பார்வை செய்தலும் பொறுப்பாகும். |

2.0 நியமிக்கப்படுவோர் தொகையும், நியமனத்திகதியும் நியமிப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையுமோ அல்லது அதில் ஏதேனுமொரு தொகையை நிரப்பாமலிருக்கவோ நியமிப்பு அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3.0 **சம்பளம் :**

இலக்கம் 10/2025 மற்றும் 2025.03.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்று நிரூபத்திற்கு இணங்க நில அளவை வெளிக்கள உதவியாளர் சேவையின் III, II, I மற்றும் விசேட தரங்களுக்கான உரிய மாதாந்த சம்பளப் படிமுறை: ரூபா 41,800 -10 x 490 -10 x 540 - 10 x 590 - 12 x 630 – ரூபா 65,560.00 ஆகும்.

4.0 இந்தப் பதவி நிரந்தரமானது. இந்த பரீட்சையில் நில அளவை வெளிக்கள உதவியாளர் சேவையில் III தரத்திற்கு நியமிக்கப்படும் அலுவலருக்கு உரித்தான ஓய்வூதியம், ஓய்வூதிய முறைமை தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்படும் தொழில்சார் தீர்மானங்களுக்கு இணங்க தீர்மானிக்கப்படும். இந்த நியமனம் மூன்று (03) வருடகால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டிருப்பதுடன் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை ஆற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் ஆரம்பத்தில் உள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு உரியதான பொதுவான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

5.0 **தகைமைகள்:**

5.1 **கல்வித் தகைமைகள் :**

(அ) கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.2 **தொழில்சார் தகைமைகள் :**

நில அளவைக் கள உதவியாளர் பதவிக்குரிய மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழிற் பயிற்சித் தகைமையில் (NVQ) குறைந்த பட்சம் இரண்டாவது மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

5.3 **ஆகக் குறைந்த நிபுணத்துவம் :**

(அ) நில அளவைக் களத்தை இனங்காண உதவுதல்
(ஆ) அளவை உபகரணங்களையும், கருவிகளையும் பாதுகாத்தலும் பராமரித்தலும்

5.4 **உடல் சார் தகைமைகள் :**

சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல், உள ரீதியான தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5.5 **ஏனையவை :**

I. ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
III. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தேவையான தகைமைகள் அனைத்தையும், விண்ணப்பம் கோரப்பட்டுள்ள இறுதித் திகதியன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5.6 **வயது :**

விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிப்பவர்களிற்கு இவ்வுயர் வயதெல்லை ஏற்புடையதல்ல)

6.0 **பிழையான தகவல்கள் :**

இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு யாதேனுமொரு விண்ணப்பதாரருக்கும் தகைமையில்லையெனத் தெளிவானால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் பொழுதோ அல்லது பரீட்சைக்கு பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னராயினும் விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் ஒரு தகவலை அது பிழையெனத் தெரிந்து கொண்டு சமர்ப்பித்திருந்தாலோ அல்லது ஏதேனும் தகவலை வேண்டுமென்றோ மறைத்திருப்பது கண்டறியப்பட்டால் அவர் அரசாங்க சேவையில் இருந்து நீக்கப்படலாம்.

7.0 **ஆட்சேர்ப்பு முறை:**

எழுத்துப்பரீட்சை மற்றும் தகைமைகளை பரிசோதனை செய்யும் நேர்முகப் பரீட்சை மூலம்

**பரீட்சைப் பாடத்திட்டம் :**

இப் பரீட்சை இரண்டு பாடங்கள் கொண்டதோர் எழுத்து மூலப்பரீட்சை ஆகும். இப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடத்தப்படுவதுடன் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| *பாடம்* | *பெறக்கூடிய முழுப்புள்ளிகளின் அளவு* | *சித்தியெய்த பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளின் வீதம்* | *காலம்* |
|---|---|---|---|
| 1 .பொது அறிவு | 100 | 40% | 2 மணித்தியாலம் |
| 2. நுண்ணறிவு | 100 | 40% | 1 மணித்தியாலமும் 15 நிமிடங்களும் |

7.1 **பாட விதானம் :**

I. **பொது அறிவு**: இவ் வினாத்தாள் விண்ணப்பதாரர் தாம் வதியும் சுற்றாடல் உட்பட இலங்கையின் அரசியல், சமூக, கலாசார, சமய, பொருளாதார பின்னணியுடன், விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் சர்வதேச ரீதியாக முக்கியமான பொது விடயங்கள் தொடர்பாகப் பெற்றுள்ள அறிவைப் பரிசோதிப்பதாக அமையும்.

II. **நுண்ணறிவு**: இது விண்ணப்பதாரரின் சிந்திக்கும் ஆற்றல், அலசி ஆராயும் தன்மை, சமயோசிதமாக தீர்மானமெடுக்கும் திறமை போன்றவற்றை அளவிடும் பல தேர்வு வினாக்களை உள்ளடக்கிய ஒரு வினாத்தாளாகும்.

7.2 **தேர்வு முடிவுகள்:**

தேர்வு முடிவுகள் விண்ணப்பதாரர்களுக்கு நில அளவையாளர் நாயகத்தினால் தபால் மூலமாகவோ அல்லது www.survey.gov.lk என்ற இணையத்தளத்திலோ அறிவிக்கப்படும்.

8.0 **தெரிவு முறை :**

8.1 நில அளவையாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைச் சபையினால் விண்ணப்பதாரர்களின் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களை பரிசோதனை செய்யும் பொருட்டு மட்டும் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு, பின்னர் எழுத்துப்பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பெற்ற புள்ளிகளின் திறமையின் ஒழுங்கில் மட்டும் தரம் iii இற்கான நில அளவைக் கள உதவியாளர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

வெற்றிடங்களின் எண்ணிக்கைப் படி நில அளவையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் விண்ணப்பதாரிகளின் தகைமைகளை பரிசோதனை செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**9.0 விண்ணப்பப் படிவங்களை தயாரித்தலும் சமர்ப்பித்தலும் :**

(அ) இவ் அறிவித்தலின் முடிவில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப 21 x 29 cm (A4) அளவுத்தாளில் இரு பக்கங்களையும் பாவித்து விண்ணப்பதாரிகள் தாமாகவே விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். இல 1.0 முதல் 4.0 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும் இல. 5.0 முதல் இல. 9.0 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் இல. 10.0 முதல் 12.2 வரையான தலைப்புக்கள் மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) தற்போது அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையின் கீழ் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும், அரசகூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் அவற்றை தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாகவும் உரிய தினத்திற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) விணணப்பப்படிவங்கள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஈ) உரிய மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக இல்லாத உரிய தினத்திற்கு முன் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாமல் குறைபாடுகளுடன் கூடிய விண்ணப்பங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பங்களை நிரப்பாமையினால் நிகழும் பிரதிபலன்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றை தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் படிவம் அறிவித்தலுடன் காணப்படும் விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திருக்கிறதா என விண்ணப்பதாரர் பரிசீலித்தல் வேண்டும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(உ) விண்ணப்பங்கள் கிடைக்கப்படுகின்றதென அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பில் செய்யப்படும் எதுவித முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

9.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதிக்கு வர்த்தமானி அறிவித்தலின்படி 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூரணப்படுத்தியவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கலாம். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி 2025.10.22 அன்றோ அத்தினத்திற்கு முன்னரோ விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களிற்கும் போட்டிப் பரீட்சைக்கு தோற்ற நில அளவையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சை தோற்ற அனுமதியட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் இப் பரீட்சைக்கு தோற்றவோ அல்லது இப் பதவிக்கான தகைமையுள்ளவர் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவோ கருதப்படக்கூடாது.

9.2 விண்ணப்பபடிவம் அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் "ஆரம்ப மட்டப் பகுதி தேர்ச்சிபெற்ற சேவைத் தொகுதியின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு - நில அளவைக் கள உதவியாளர்" எனத்தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

9.3 விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், நொத்தாரிசு, முப்படைகளிலும் ஆணையிடும் தரத்திலுள்ள அதிகாரிகள், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு பதவியை கொண்டுள்ள உத்தியோகத்தர் அல்லது அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 10/2025 இன் தரப்படுத்தலுக்கு அமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டங்களில் உள்ள ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோரில் எவரேனும் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**10.0 பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணம் ரூபா 800.00 ஆகும். இத்தொகையை அஞ்சல் பெட்டி 506, கொழும்பு– 05 இல் அமைந்துள்ள நில அளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலுள்ள காசாளர் பிரிவில் அல்லது எந்தவொரு மாவட்ட நில அளவை அலுவலகத்திலோ அல்லது தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும் (பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றினை எதிர்காலத் தேவைக்காக தன்வசம் வைத்திருத்தல் வேண்டும்). எக்காரணம்

கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் காசுக்கட்டளை அல்லது காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டு இன்றி சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11.0 **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 22.10.2025 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்,
பரீட்சைகள் பிரிவு,
நில அளவைத் திணைக்களம்,
அஞ்சல் பெட்டி இல. 506,
கொழும்பு 05.

11.1 அனுமதி அட்டை வழங்கிய உடன் அதற்கான அறிவிப்பு நில அளவைத் திணைக்களத்தின் அதிகாரபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும். அறிவிப்பை வெளியிட்ட 03 அல்லது 04 நாட்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்காத ஒரு விண்ணப்பதாரி, நில அளவைத் திணைக்களத்தின் பரீட்சைகள் பிரிவுக்கு இது குறித்துத் தெரிவிக்க வேண்டும்.

12.0 **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

பரீட்சைக்குத் தோற்றும் ஒரு பரீட்சார்த்தி அப்பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது. ஒரு பரீட்சார்த்தி தமக்கென குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

13.0 **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்:**

பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரம் தொடர்பாகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும் இதற்கென பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

I. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியான கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியான வாகன அனுமதிப் பத்திரம்.

14.0 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயமிருப்பின் அது குறித்து நில அளவையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைப் பிரகாரம் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானியில் காணப்படும் பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கு அமைவாக நடந்துகொள்ளக் கட்டுப்பட்டுள்ளனர்.

வை.ஜி.ஞானதிலக,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
கொழும்பு - 05,
2025, செத்தெம்பர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்பமட்ட- பகுதி தேர்ச்சி பெற்ற சேவைத் தொகுதியில் நில அளவைக் கள உதவியாளர்கள் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025**

☐

(அலுவலகப் பயன்பாட்டுக்கு மாத்திரம்)

பரீட்சைக்கு தோற்றுகின்ற மொழிமூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3
(தரப்பட்ட கூட்டினில் இலக்கத்தை இடவும்) ☐

1.0 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : (முதலெழுத்துக்களை ஆங்கில பெரிய எழுத்துக்களில் பெயரின் இறுதியில்) உதா : PERERA, A. B. C.

.............................................................................................................................................

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): ..................................................................................

.............................................................................................................................................

1.3 முழுப்பெயர் (தமிழில் அல்லது சிங்களத்தில்): ......................................................................................

.............................................................................................................................................

1.4 தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

1.5 பிறந்த திகதி:

ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

1.6 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது:

வருடங்கள் : ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

1.7 பால் : (ஆண்-M, பெண்-F) ☐

1.8. சமூக நிலை: திருமணமானவர்: ☐ திருமணமாகாதவர் : ☐

2.0 நிரந்தர முகவரி :

2.1 ஆங்கில பெரிய எழுத்துக்களில் :..............................................................................................

.............................................................................................................................................

2.2 சிங்களத்தில்/தமிழில் :.................................................................................................................

.............................................................................................................................................

2.3 அனுமதிபத்திரங்களை அனுப்ப வேண்டிய முகவரி :........................................................................

.............................................................................................................................................

3.0 3.1 முகவரி கொடுக்கப்பட்ட நிர்வாக மாவட்டம் (உப அட்டவணை 1 ஐப் பார்க்கவும்)

மாவட்ட இலக்கம் : ☐ மாவட்டத்தின் பெயர்: ☐

3.2 எப்போதிலிருந்து அம் மாவட்டத்தில் வசிக்கின்றீர்கள்? ..............................................................................

4.0 தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிரந்தர : | | | | | | | | | | |
| கையடக்க: | | | | | | | | | | |

5.0 கல்வித் தகைமைகள்: க.பொ.த. (சா.த.) பரீட்சை பற்றிய விபரங்கள்:
(சான்றிதழ்களின் பிரதிகளை சேர்த்து அனுப்புதல் வேண்டும்.)

5.1 முதலாவது அமர்வு:

பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும்; ......................... சுட்டிலக்கம்: .........................

சித்தியெய்திய பாடங்கள்: ........................

| *பாடங்கள்* | *தரம்* | *பாடங்கள்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | | |

5.2 இரண்டாவது அமர்வு:

பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும்:......................... சுட்டிலக்கம்:.........................

சித்தியெய்திய பாடங்கள்:.........................

| *பாடங்கள்* | *தரம்* | *பாடங்கள்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | | |

6.0. தொழில்சார் தகைமைகள்: நிலஅளவை கள உதவியாளர் பதவிக்குரிய, பெற்றுள்ள NVQ தகைமைகள் பற்றிய விபரங்களைக் குறிப்பிடவும்.

(துறைசார் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளை அனுப்புதல் அவசியம்)
..............................................................................................................................................................

7.0. ஏனைய தகைமைகள் :
..............................................................................................................................................................

8.0. குற்றச் செயலொன்றுக்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா?

ஆம் ☐ இல்லை ☐

8.1 ஆம் எனின் அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக?

........................................................................................................................................................................

9.0 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள்:

i. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம்;:.........................................................................................................
ii. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும்:.......................................................................................................................
iii. செலுத்திய தொகை:.................................................................................................................................................

| பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும். |
|---|

10.0 விண்ணப்பதாரரின் உறுதியுரை

அ. இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானதும், சரியானதும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

ஆ. என்னால் செய்யப்பட்டுள்ள இப் பிரகடனம் பொய்யானதென உறுதியாகுமிடத்து நான் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் பெற்றபின் அவ்வாறு உறுதியாகுமிடத்து சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

இ. ரூபா………………செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டு உரிய இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

ஈ. மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பான நில அளவையாளர் நாயகத்தின் விதிகளுக்கும் சட்ட ஒழுங்ககளுக்கும் கட்டுப்படுவதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

உ. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விபரத்தையும் பின்னர் மாற்றமாட்டேன்.

....................... ..........................................................
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

11.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி......................................................................................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிந்துள்ளதாகவும் அவர்.................................................. ஆந் திகதி என் முன்னிலையில் மேலே 10.0 ஆம் பந்தியின் கீழ் ஒப்பமிட்டதாகவும் உறுதி செய்கின்றேன்.

....................... .............................................................
திகதி உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் பெயர்:.........................................................
பதவிப் பெயர்:.........................................................
முகவரி:.........................................................
(பதவி முத்திரையால் சான்றுப்படுத்தவும்)

12.0 திணைக்களத் தலைவரின் பரிந்துரை:

(அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

12.1 உத்தியோகத்தரின் சுயவிபரக்கோவைக்கமைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அண்மித்த ஐந்து ஆண்டுகளுக்குள், வேலை, நடத்தை, வரவு திருப்தியானது/திருப்தியற்றது. சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார்/இல்லை. எந்தவோர் ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை/ உள்ளாகியுள்ளார்.

12.2 விண்ணப்பிப்பவர் இந்த பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியும் /விடுவிக்கப்பட முடியாது.

..........................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
பதவி முத்திரை

திகதி: ...............................

அட்டவணை 1

மாதிரி விண்ணப்பப் படிவத்தில் தலைப்பு இல. 03.1 இல் குறிக்கப்படும் முகவரி உரித்தாகும் நிர்வாக மாவட்டம் தொடர்பில் இவ் அட்டவணை தொடர்புடையது.

| *நகரங்கள்/மாவட்டங்களின் பெயர்* | *நகரங்கள்/ மாவட்டங்களின் இலக்கங்கள்* |
|---|---|
| 01. கொழும்பு | 01 |
| 02. கம்பஹா | 02 |
| 03. களுத்துறை | 03 |
| 04. கண்டி | 04 |
| 05. மாத்தளை | 05 |
| 06. நுவரெலியா | 06 |
| 07. காலி | 07 |
| 08. மாத்தறை | 08 |
| 09. அம்பாந்தோட்டை | 09 |
| 10. குருநாகல் | 10 |
| 11. புத்தளம் | 11 |
| 12. அநுராதபுரம் | 12 |
| 13. பொலநறுவை | 13 |
| 14. பதுளை | 14 |
| 15. மொணராகலை | 15 |
| 16. இரத்தினபுரி | 16 |
| 17. கேகாலை | 17 |
| 18. அம்பாறை | 18 |
| 19. மட்டக்களப்பு | 19 |
| 20. திருகோணமலை | 20 |
| 21. யாழ்ப்பாணம் | 21 |
| 22. வவுனியா | 22 |

09-166

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பதிவாளர் சேவையில் III வகுப்பு II தரம் தகைமைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2025

01. பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையில் III வகுப்பு II தரம் தகைமையில் உள்ள பணியிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2025, திசெம்பர் மாதம் நடைபெறும் என்பது இதன்மூலம் தெரிவிக்கப்படுகின்றது. அதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்கள் சமர்ப்பிக் கப்பட வேண்டியது நிகழ்நிலை முறையிலேயே ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2025, ஒற்றோபர் மாதம் 17 திகதி ஆகும்.

**குறிப்பு :** நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படுவது 2025, செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி மு.ப 9.00 தொடக்கம் ஆரம்பமாவதுடன் 2025, ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதி இரவு 9.00 மணிக்கு நிறைவடையும்.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி வரை தாமதமாக்குவதில் ஏற்படும் எந்தவொரு இக்கட்டான சூழலும் விண்ணப்பதாரரினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

02. **பரீட்சை :**

2025, திசெம்பர் மாதத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சை முடிவுகளின்படி அதிக மதிப்பெண்களை பெற்ற விண்ணப்பதாரர்கள் இப் பணியிடத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.இப்பரீட்சைகீழ்க்குறிப்பிடப்படும் நகரங்களில் நடைபெறும். அந்நகரங்களும் நகர எண்களும் கீழே வழங்கப்பட்டுள்ளன. போதுமான விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பது அல்லது வேறு காரணங்களுக்காக எந்தவொரு தேர்வு மையம் இரத்து செய்யப்பட வேண்டும் என அல்லது விண்ணப்பதாரர்களின் இரண்டாவது விருப்பத்தின்படி தேர்வு மையத்தை தீர்மானிப்பது பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களின் அதிகாரத்தின்படி ஆகும். மேலும், முன்மொழியப்பட்ட அனைத்து நகரங்களிலும் அல்லது பல நகரங்களில் தேர்வு மையங்களை அமைக்க விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை போதிய அளவில் இல்லாதவிடத்து, தேர்வினை கொழும்பு மாவட்டத்தில் நடாத்த

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

| *நகரம்* | *இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| குருநாகல் | 06 |
| அநுராதபுரம் | 07 |
| பதுளை | 08 |
| இரத்தினபுரி | 09 |

03. **பணியில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

பொது சேவை நியமனங்களை கட்டுப்படுத்தும் விதிகள் மற்றும் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பதிவாளர் சேவையில வகுப்பு III தரம் II தகைமை பணியிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தாங்கள் விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

(ii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்பட்டுள்ள PSC/EST/2/1/25/1/3/2011 இலக்க 2012.05.08 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் புலம் சார்ந்த / அலுவலகம் சார்ந்த அதிகாரிகள் வகுப்பு 2 பணியாளர்களுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை களுக்கு உட்பட்டதுடன் மேலும், அதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் மேற்கொள் ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படவிருக்கும் எந்தவொரு திருத்தங்களுக்கும், நிறுவனக் கொள்கைகள் மற்றும் நிதி விதிமுறைகளுக்கும் உட்பட்டதுடன் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆந் திகதியுடைய விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழு பணி நெறிமுறைகளுக்கும் உட்பட்டதாகும்.

(iii) சேவையில் நியமிக்கப்பட்ட அலுவலர், நியமன அதிகாரியின் தீர்மானத்தின்படி பயிற்சிக்கு உட் படுத்தப்படுவார்.

(iv) இந்த நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. பணியிடத்தில் மூன்று வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர், பதிவாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப் படும் நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் வினைத் திறன்காண் தடைதாண்டல் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். வயது அடிப்படையில் வினைத்திறன்காண் தடைதாண்டலில் இருந்து விடுவிக்கப்பட மாட்டாது.

(v) நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டால், நீங்கள் நியமனத்திற்காக தகுதி பெற்ற மொழித் துறையின் படி, 2020.10.16 ஆந் திகதியிலான அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கு அமைய அரசகரும மொழியில் தேர்ச்சிப் பெற வேண்டும்.

04. **சம்பள அளவுத்திட்டம் :**

10/2025 இலக்க 2025.03.25 ஆம் திகதிய பொது நிர்வாக சம்பள சுற்றறிக்கையின் MN 05-2025 ஏற்பாடு களுக்கமைய, இந்நியமனத்துக்கு உரித்தாகும் மாதாந்த சம்பள அளவு ரூ. 58,660 -10 x 1,190-11x 1,360 -15x 1,670 - ரூ.110,570.00 ஆவதுடன், மேலும் இச் சம்பளமானது 2027.01.01 ஆந் திகதி முதலே உரித்துடையதாகும். நியமனம் அமுலுக்கு வரும் திகதியிலிருந்து உங்களுக்கு இச் சுற்றறிக்கையின் அட்டவணை III இன் நெறிமுறைகளுக்கு அமைய ஊதியமானது வழங்கப்படும்.

05. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாதிருப்பதுடன், வயது 35 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (அதற்கமைய, 2004.10.17 திகதிக்கு அல்லது அதற்கு முன்போ, மற்றும் 1990.10.17 திகதிக்கு அல்லது அதற்கு பிறகோ பிறந்தவர்கள் மாத்திரமே இதற்கு தகுதியுடையவர்களாவர்.)

06. **தகைமைகள் :**

2025.10.17 திகதிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கப்பட வேண்டும் :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். சிறந்த நடத்தை கொண்டவராக இருக்க வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், அந்தப் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கிய தகுதி பெற்றவராக இருக்க வேண்டும்.

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியாக இருத்தல்.

அல்லது

(iii) இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதி சட்டத் தேர்வில் தேர்ச்சி பெற்று, உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக இருக்க வேண்டும். சத்தியப் பிரமாணம் செய்த வழக்கறிஞராக இருக்க வேண்டும்.

07. **சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் நடைமுறை :**

பரீட்சையில் தேர்ச்சி பெறுவதற்கு, ஒவ்வொரு வினாத்தாளிலும் குறைந்தது 40% அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு மதிப்பெண்கள் பெற்ற விண்ணப்ப தாரர்கள், அவர்களுடைய மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில், அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு தகுதிக்கான நேர்முகத் தேர்விற்கு அழைப்பு விடுக்கப் படும். இந்நேர்முகத் தேர்வானது சான்றிதழ்களை பரிசீலிப்பதற்காக மட்டுமே நடாத்தப்படும்.

08. **பரீட்சை நிபந்தனைகள் :**

8.1 விண்ணப்பதாரர்கள் விரும்பும் ஒரு மொழியில் மாத்திரம் பரீட்சையில் தோற்ற முடியும். விண்ணப்பதாரர்கள் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் அதே மொழியில் மாத்திரம் பதிலளிக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அனைத்து வினாத்தாள்களுக்கும் கட்டாயமாக சமுகமளிக்க வேண்டும்.

8.2 பரீட்சைக் கட்டணம் ரூ. 1200.00 ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும்போது, நிகழ்நிலை முறையில் வழங்கப்படும் கீழ்க்கண்ட கட்டண முறைகள் மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும் :

i. எந்தவொரு வங்கியின் கடன் அட்டை மூலமாக (Any Bank Credit Card) ;

ii. இணைய பரிவர்த்தனை வசதி கொண்ட எந்தவொரு வங்கி அட்டையினால் (Any Bank Debit Card with Internet Transaction Facility) ;

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon);

iv. இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையின் ஊடாக (Any Branch of the Bank of Ceylon).

*குறிப்பு* :

(அ) மேற்கண்ட முறைகளின் மூலம் கட்டணம் செலுத்தும் முறை தொடர்பான வழி முறைகள் இணையதளத்தில் பரீட்சைக் கான தொழில்நுட்ப வழிகாட்டுதலின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் செலுத்தப்பட்டதற்கான அறி விப்பு குறுஞ்செய்தி (SMS) அல்லது மின் னஞ்சல் மூலம் வழங்கப்படும். தேர்வு கட்டணமாகக் குறிப்பிடப்பட்டுள்ள முழுத் தொகை செலுத்தப்பட வேண்டும் என்ப துடன் பரீட்சை கட்டணமாக குறைவாக அல்லது அதிகமாக பணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்ட முறைகள் மூலம் கட்டணம் செலுத்தும் போதான குறைபாடுகளுக்காக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீள வழங்கப்படமாட்டாது அல்லது வேறு பரீட் சைக்கு மாற்றப்படமாட்டாது.

8.3 அனுமதிப் பத்திரமின்றி பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய அனுமதி வழங்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கும் தினத்தில், பரீட்சை மண்டப பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதி செய்யப் பட்ட அனுமதி பத்திரம் ஆகும்.

8.4 விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதி பத்திரம் வழங்கப்படுவது, அவர் பரீட்சையில் பங்கேற்ப தற்கான தகுதி பெற்றவராக ஏற்றுக்கொள்ளப் பட்டதாக கருதப்படாது.

8.5 நிகழ்நிலை (Online) தேர்வு விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியிலேயே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரர் நிகழ்நிலையில் சமர்ப்பிக்கும் மென்பிரதி நகல் செல்லுபடியாகும் விண்ணப்பமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ ஏற்றுக் கொள்ளப்படாததா என்பது குறித்து, விண்ணப்பத்தை சமர்ப்பிக்க பயன்படுத்திய கைப் பேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாக அறிவிக்கப் படும்.

நிகழ்நிலை விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன், தேர்வுக்கான விண்ணப்ப நடைமுறைக்காக வெளியிடப்பட்ட (Instructions) பதிவிறக்கம் செய்து, விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது அதிலுள்ள வழிமுறைகளை கட்டாயமாக பின்பற்ற வேண்டும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியினை பெற்ற பின்னர் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்படமாட்டாது. முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

8.6 வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தகுதிகள் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் கருதுகோளை அடிப் படையாகக் கொண்டு, சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் அவர்களால் நிகழ்நிலை முறையில் மாத்திரமே பரீட்சைக்கான அனுமதி பத்திரம் வழங்கப்படும். அனுமதி பத்திரம் வெளியிடப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் இணையதள அறிவிப்பு மூலமாகவோ அல்லது விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அறிவிக்கப்படும்.

அனுமதிப்பத்திரம் பெறாத விண்ணப்பதாரர் இருந்தால், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அதுகுறித்து இலங்கைப் பரீட்சைகள் திணைக் களத்தின் பரீட்சை ஒழுங்கமைப்பு பிரிவுடன் தொடர்புகொள்ள வேண்டும். அவ்வாறு தொடர்பு கொள்ளும் போது, விண்ணப்பதாரர் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவை தெளிவாகக் குறிப்பிடப்பட்ட கோரிக்கை கடிதம் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படுவது மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறான கோரிக் கையின் போது, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரப்படும் எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்துவதற்காக, விண்ணப்ப தாரர் தன்னிடம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியை தயாராக வைத்திருக்க வேண்டும். அனுமதிப் பத்திரத்தினை பரிசீலித்து திருத்தங்கள் தேவையெனில், காலக்கெடுவுக்குள் பரீட்சைகள் திணைக்களத்தை தொடர்பு கொண்டு, விண்ணப்பத்தின் அடிப்படையில் தொடர்புடைய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். தேர்வு மண்டபத்தில் திருத்தங்கள் செய்வதற்கான கோரிக் கைகள் பரிசீலிக்கப்படமாட்டாது.

09. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் கட்டாயமாக உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். ஏதேனும் ஒரு அரசாங்க நிறுவனத்தின் மூலம் தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரரின் கையொப்பமானது, அந்த நிறுவனத்தின் தலைமை அதிகாரியினால் அல்லது அவர் அதிகாரம் வழங்கிய அலுவலரினால் உறுதிப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு அல்லாத பிற விண்ணப்பதாரர்களின் கையொப்பமானது பின்வரும் அதிகாரிகளில் எவரேனும் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் அரசாங்க பாடசாலை அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளில் அதிகாரம் பெற்ற அலுவலர், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர், பௌத்த விகாரஸ்தானத்தின் விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு, அல்லது பிற மத வழிபாட்டு ஸ்தலத்தின் பொறுப்பாளர் அல்லது அந்த மத அமைப்பில் குறிப்பிடத்தக்க நிலை வகிக்கும் நபரினால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

10. **பரீட்சை மண்டபத்துக்கான நுழைவு :**

(i) பரீட்சையில் பங்கேற்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். தமது அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரருக்கு பரீட்சையில் பங்கேற்க அனுமதி வழங்கப் படமாட்டாது.

(ii) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தமக்காக ஒதுக்கப் பட்டிருக்கும் பரீட்சை மண்டபத்தில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். மேலும், ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பரீட்சையில் பங்கேற்போருக்கு விதிக்கப்பட்டுள்ள பொதுச் சட்டங்களுக்கும் விதி முறைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

11. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம் :**

(i) பரீட்சையில் பங்கேற்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தாம் பங்கேற்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய பரீட்சை மண்டபத்தில், பரீட்சை மண்டப பொறுப்பாளர் திருப்தி அடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களே செல்லுபடியானவையாக கருதப்படும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதி பத்திரம்.

(ii) மேலும், விண்ணப்பதாரர்கள் தமது முகம் மற்றும் செவிகள் தெளிவாகத் தெரியுமாறு, எந்தவித தொழில்நுட்ப தொடர்பாடல் சாதனங்களையும் அணியாமையை உறுதிப்படுத்தும் வகையில் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைதல் வேண்டும். தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதை மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்த தருணத் திலிருந்து பரீட்சை நிறைவடைந்து வெளியேறும் வரை முகத்தையும் செவிகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

12. **போலியான தகவல்கள் வழங்குவதற்கான தண்டனைகள்:**

(i) விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது, விண்ணப்பதாரர்கள் மிகுந்த கவனத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இவ்விதமான தேர்விற்கு உட்பட்ட விதிமுறைகளின் படி, ஏதேனும் விண்ணப்பதாரர் இத்தேர்வில் பங்கேற்பதற்கு தகுதியற்றவர் எனத் தெரியவரின், தேர்வுக்கு முன், தேர்வு நடைபெறும் வேளையில் அல்லது அதற்குப் பின்னர் எப்போதானாலும், அவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(ii) விண்ணப்பதாரர் வழங்கிய தகவல்கள் பின்னாளில் போலியானவை என்று தெரியவந்தாலோ அல்லது அவர்/அவள் வேண்டுமென்றே சில விடயங்களை மறைத்திருந்தாலோ, அவருக்கு இனிவரும் காலங் களில் எந்த நியமனமும் வழங்கப்படமாட்டாது. மேலும், இத்தேர்வின் அடிப்படையில் வழங்கப் பட்ட நியமனம் இரத்து செய்யப்படவோ அல்லது அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படவோ வாய்ப் புள்ளது.

13. இவ்விதிமுறைகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக, அரசாங்க சேவைகள் ஆணைக்குழு வழங்கும் தீர்மானத்தின்படி நடவடிக்கைகள் எடுக்கப் படும்.

14. **பரீட்சை நடைமுறை :**

(i) **மொழி மூலம் :**

(அ) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிமூலங்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விண்ணப்பிக்கலாம்.

(ஆ) அனைத்து விண்ணப்பதாரர்களும், தாங்கள் கோரிய மொழிமூலத்தின் மூலமாகவே அனைத்து வினாத்தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(இ) தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ii) **பாடப்பிரிவுகள் மற்றும் பாடத்திட்டம் :**

இத்தேர்வு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடப்பிரிவுகளுக்கான எழுத்துத் தேர்வுகளைக் கொண்டு அமையும்.

| *பாடம்* | *பாட பிரிவு* | *காலம்* | *அதிகபட்ச மதிப்பெண்* | *தேர்ச்சி மதிப்பெண்* |
|---|---|---|---|---|
| நுண்ணறிவு | 01 | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| பொது அறிவு | 02 | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| மொழித் திறன் | 03 | 1 மணித்தியாலம் | 100 | 40 |

பாடத்திட்டம் :

| *வினாத்தாள்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| 01. **நுண்ணறிவு**<br>வினாத்தாள் பன்முக மற்றும் குறுகிய பதில் 50 வினாக்களைக் கொண்டுள்ளது. அனைத்து வினாக் களுக்கும் பதிலளிக்க வேண்டும். | விண்ணப்பதாரரின் தர்க்கமான பகுப்பாய்வு திறன் மற்றும் வாய்மொழியல்லாத முறையில் வழங்கப்படும் தகவல்களைச் செல்லுபடியாகும் வகையில் சுட்டிக்காட்டி பின்பற்றும் திறன் மற்றும் அறிவு ஆகியவற்றை மதிப்பீடு செய்ய அமைக்கப்பட்ட வினாத்தாள் ஆகும். |
| 02. **பொது அறிவு**<br>வினாத்தாள் பன்முக மற்றும் குறுகிய பதில் 50 வினாக்களைக் கொண் டுள்ளது. அனைத்து வினாக்களுக்கும் பதிலளிக்க வேண்டும். | இது விண்ணப்பதாரரின் இலங்கை சமூக மற்றும் பண்பாட்டு கட்டமைப்புகள், தேசிய மற்றும் சர்வதேச அளவில் முக்கியமான சமீபத்திய நிகழ்வுகள் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் தொடர்பான பொது அறிவு திறனை மதிப்பீடு செய்ய அமைக்கப்பட்ட வினாத்தாள் ஆகும். |
| 03. **மொழித்திறன்** | |
| வினாத்தாள் பன்முக மற்றும் குறுகிய பதில் 50 வினாக்களைக் கொண்டுள்ளது. அனைத்து வினாக் களுக்கும் பதிலளிக்க வேண்டும். | வழங்கப்படும் தலைப்புகளின் கீழ் கருத்துகள் மற்றும் தகவல்களை சுருக்கி சமர்ப்பிக்கும் திறன் மற்றும் ஆவணங்களை தொகுத்து வெளிப்படுத்தும் திறன் ஆகியவற்றை மதிப்பீடு செய்ய அமைக்கப்பட்ட வினாத்தாள் ஆகும். |

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலின் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

ச. ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A 3,
டென்சில் கொப்பேக்கடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
2025,செத்தெம்பர் 10.

09-181

---

## நில அளவைகள் சபை

### நில அளவைகள் சபையில் பதிவு செய்வதற்காக, செயன்முறை அனுபவத்தினைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரல்

2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைகள் சட்டத்தின் 39 ஆம் பிரிவுக்கு அமைய நில அளவைகள் சபையில் பதிவு செய்வதற்காக தேவையான செயன்முறை அனுபவத்தினை இலங்கை நில அளவையாளர் திணைக் களத்தின் ஊடாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. அதற்கு அமைய மேற்படி செயன்முறை அனுபவத் தினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் நபர்களின் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பங்களைக் கோருவதற்கு நில அளவைகள் சபை தீர்மானித்து உள்ளது.

அதற்கு அமைய மேற்படி நில அளவைகள் சட்டத்தின் 39 ஆம் பிரிவுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய அட்டவணையின் (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நபர்கள், இதற்காக விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தில் பயிலுநர் நில அளவையாளர்களாக ஏற்கனவே பயிற்சி பெறும் நபர்கள் இதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் தேவைப்பாடு இல்லை.

சகல விண்ணப்பதாரிகளும் www.landsurveycouncil.org எனும் நில அளவைகள் சபையின் உத்தியோகபூர்வ இணைத்தளத்தில் உள்ளடக்கப்பட்டு உள்ள விண்ணப் பத்தின் மூலம் நிகழ்நிலை முறையின் ஊடாக தமது விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி விண்ணப்பத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட வன் பிரதி ஒன்றை 2025.10.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் "நில அளவைகள் சபை, நில அளவையாளர் நாயக அலுவலகம், இல. 150, பேர்னாட் சொய்ஸா மாவத்தை, கொழும்பு 05" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

வை. ஜி. ஞானதிலக,
தலைவர்.

நில அளவைகள் சபை,
நில அளவையாளர் நாயக அலுவலகம்,
இல. 150, பேர்னாட் சொய்ஸா மாவத்தை,
கொழும்பு 5,
2025,செத்தெம்பர் 04.

09 -213

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.